திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்.

மாலை : 8 5—8—55 வெள்ளி : 14 பக்கங்கள் : விலை 3 அணா மலர் : 53

பெரியாரின் போராட்டமும் தி. மு. கழகமும்

தோழர்களே, உங்கள் கருத்தைத் தெரிவியுங்கள்

நக்கீரன்

பெரியார் அவர்கள் நடத்த யிருந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் (இந்திய சர்க்கார் கொடியை எரித்தல்) திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கலந்து கொண்டால் குடிமுழுகிப் போய்விடுமா! பெரியார் அழைப்பு விடுத்தால்தான் கலந்து கொள்வோம் என தி. மு கழகத்தினர் கூறுவது சரியாகுமா? யார் வீட்டுத் திருமணத்திற்கு யார் அழைப்பு விடுவது—எல்லாம் சுத்த அம்பக் என்றெல்லாம் திராவிட கழகத் தோழர்களும், திராவிட இயக்க அனுதாபிகளில் சிலரும் அங்கலாய்த்துக் கொண்டனராம்!

இவ்வாறு பேசிடும் தோழர்களின் எண்ணத்தில் நாம் அனுதாபம் கொள்ள வேண்டித்தானிருக்கிறது. எனினும் இத்தோழர்கள், சென்ற கால சம்பவங்களை நடுநிலையிலிருந்து எண்ணிப் பார்க்க மனவளம் பெறுதது வருந்தக் கூடியதாகும்.

எனவே இத்தகைய மனப்பான்மை கொண்டவர்களுக்கு சிலவற்றை எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

ஜூலை 31-ம் நாள் சென்னை கடற்கரையில் திராவிடக் கழகக் கூட்டம் ஒன்று நடைபெற்றது, அக்கூட்டத்தில் பெரியார் பேருரை நிகழ்த்துகையில், திராவிட முன்னேற்றக் கழகத்தினரை [அவரது பாணியில் கண்ணீர்த்துளி கட்சியினரை] வெளுத்துக் கட்டி விட்டார்!

நாம் அதைப்பற்றிக் கூட கவலைப்படவில்லை, மாற்றுக் கட்சித் தோழர்களில் சிலர் நம்மீது வசை புராணம் பாடித்திரிவதையே ஓர் தொழிலாகக் கொண்டிருக்கும் பொழுது நமது பெரியார் அவர்கள் நம்மைத் தாக்கிப் பேசுவதைத் தாங்கிக்கொள்வதில் நமக்குச் சிரமமிருக்கா தல்லவா.

ஆனால் அவர் தமது பேருரையில் குறிப்பிட்ட சிலவற்றை மட்டும் எடுத்துக் காட்டுகிறோம். "இந்த கண்ணீர்த்துளி பசங்களை யார் அழைத்தது நாங்கள் கொடி எரிப்புப் போராட்டத்தில் சேரமாட்டோம் என்று ஜம்பமடித்துக் கொண்டார்களாமே. இவர்களை பொருட்படுத்தி யழைக்க நான் என்ன பைத்தியக்காரனா; இவர்களால் என்ன முடியும்; விளம்பரத்துக்காகவும் பிழைப்புக்காகவும் ஒரு கட்சியை நடத்துபவர்கள்தானே இவர்கள்"

என்றும் மற்றும் பலவாறாகவும் தாக்கிப் பேசியிருக்கிறார்.

*

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற இந்திப் பெயர் அழிப்புப் போராட்டத்தில் பெரியார் அவர்களின் பொதுவான அறிக்கையை மட்டுமே பெரிதாகக் கருதி தி. மு. கழகம் தனது முழு சக்தியுடன் பெரியார் அவர்களுடன் மனமார ஒத்துழைத்தது. இன்னும் சற்று விளக்கமாகச் சொல்லவேண்டுமானால், திராவிடர் கழகத்திடமிருந்து அதிகாரபூர்வமான அழைப்பில்லாதிருந்தும், பெரியார் அவர்களின் முக்கிய வேண்டுகோளை மதித்து அறிஞர் அண்ணா அவர்கள் (அன்று பொதுச் செயலாளர்) தி. மு. கழகப் பொதுக்குழுவைக் கூட்டி, இந்திப் பெயர் அழிப்புப் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்று கமிட்டிக் கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்தார்.

தி. மு. கழகத்தின் செயற்குழு உறுப்பினர்களும் அண்ணா அவர்களின் நெருங்கிய நண்பர்களுமான தோழர்கள் கே. கே. நீலமேகம், கே. ஏ. மதியழகன், இரா. இளம்வழுதி ஆகிய மூவரும், அவரோடு சேர்ந்து போராட்டம் நடத்துவதா இல்லையா என்பது ஒருபுறமிருக்கட்டும், இக்[illegible] அவசரமாகக் கூட்டுவதற்கு திராவிடர் கழகத் தலைவரிடமோ அல்லது செயலாளரிடமிருந்தோ ஏதாவது கடிதம் வந்ததா என்று கேள்வி மேல் கேள்விகளை அடுக்கினர். நம் கழகத்திற்கு அழைப்பில்லாமல் அவரோடு சேர்ந்து செயலாற்றுவது கூடாது என்றும் கடுமையாக எதிர்த்தனர், பிறகு அண்ணா அவர்கள் அதற்கான சமாதானம் கூறியதோடு கமிட்டியிலும் பெரும்பான்மையோர் அச்சமாதானத்தை ஏற்றுக் கொண்டதற்கேற்ப எதிர்த்த தோழர்கள்கூட அப்போராட்டத்தில் தீவிரமாகவும் ஈடுபட்டனர்.

இவ்வித சூழ் நிலையில் அப்போராட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் கலந்து கொண்டு திராவிட கழகத்தை விட அதிக அளவில் பணி

யாற்றிய விவரத்தை பொதுமக்களும் ஏன் அரசியலாரும் அறிவர்.

அதற்குப் பிறகு முதன் முதலாக சென்னையில் நடைபெற்ற போராட்ட வெற்றிக் கூட்டமொன்றில் பெரியார் அவர்கள் பேசுகையில் இந்தக் கண்ணீர்த்துளி பசங்களை யார் அழைத்தார்கள்; எங்கு பார்த்தாலும் இந்தப் போராட்டத்தில் இதுகளுக்கே விளம்பரம்; நான் பொதுவாக விட்ட அறிக்கையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு ஓடிவந்தார்கள் இல்லாவிடில் நாட்டிலே இவர்கள் நடமாட முடியுமா?—என்று "வாயார வாழ்த்தினார்" பெரியார்.

*

17—7—55-ம் நாளன்று திருச்சியில் கூடிய திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டியின் முடிவுக்கேற்ப அடுத்த நாள் வெளிவந்த கொடிப் போராட்ட விவரத்தையும், இரண்டொரு நாள் கழித்து 'விடுதலை' பத்திரிகை வாயிலாக போராட்டத்தில் கலந்து கொள்வோர்க்கு விளக்கமும் சர்க்காருக்கு நிபந்தனைகளும் என்ற பேரால் வெளியிடப்பட்ட விவரங்கள், பொதுமக்கள் அறிந்ததேயாகும்.

இந்திய சர்க்கார் தக்க உறுதி மொழி அளித்தாலன்றி போராட்டத்தை நிறுத்த இயலாது. என்ற எச்சரிக்கையிலிருந்து சென்னை சர்காரிலுள்ள ஏதாவது ஒரு மந்திரி உறுதி மொழி அளித்தாலும் போதும் அல்லது உயர்தர போலீஸ் அதிகாரி சர்க்கார் சார்பாக உறுதி மொழி அளித்தாலும் போராட்டம் நிறுத்தப்படும் என்பதாகப் பேசப்பட்டும் 'விடுதலை' பத்திரிகையில் எழுதப்பட்டும் வந்தன.

அது போலவே கொடியை எரிக்க விரும்புபவர்கள் பொது இடத்தில் என்றில்லாமல், வீட்டிலிருந்து கொண்டே ஏதாவது காகிதத்தில் இந்திய சர்க்கார் கொடியைப் போல செய்து கொளுத்தினாலும் போதும் என்று போர்முரசு கொட்டப்பட்டது, இதைப்பற்றி நாம் இது சமயம் மேலும் விவரிக்க விரும்பவில்லை.

இறுதியாக சென்னை முதலமைச்சர் ஏட்டிலுள்ள சட்டங்களை விளக்கியும் அதனைக் கூர்ந்து கவனிக்குமாறு வேண்டுகோள் விடுத்தும், வேண்டுகோள் ஏற்கப்படாவிடில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மிரட்டியும் அறிக்கை என்ற பேரால் தமது கருத்தை வெளியிட்டார்.

போராட்ட நிபந்தனைப்படி முதலமைச்சரின் வேண்டுகோள் ஏற்கப்பட்டு கொடி எரிப்புத் திட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி விட்டதாகப் பெரியார் அவர்களும் அறிக்கை வெளியிட்டு விட்டார். இந்த முறைகள் திராவிடர் கழகத்தைப் பொறுத்த வரையிலோ அல்லது பெரியார் அவர்களுக்கோ திருப்தியை—வெற்றியை அளித்துவிட்டதாக யிருக்கலாம்.

ஆனால் பெரியார் அவர்களின் பொதுவான ஜாடையைக் கண்டவுடனே போராட்டத்தில் கலந்து கொள்வதென்று தி மு. கழகம் முடிவு செய்திருக்குமானால் முதலமைச்சர் காமராசரின் செய்தியைக் கண்டு போராட்டத்தை தற்காலிகமாக ஒத்தி வைக்க இணங்கி யிருக்காது. ஏனெனில், காமராசர் அறிக்கை யென்ற பேரால் விடுத்துள்ள செய்தியானது வெந்த புண்ணில் வேல்கொண்டு குத்துவதப்போலவே யிருக்கிறது. நாம் இவ்வாறு குறிப்பிடுவதை இந்தி ஆதிக்கத்தைத் தென்னாட்டிலிருந்து விரட்டப்பட வேண்டும் என விரும்பும் எவரும் குரோத எண்ணத்தை விடுத்து நடுநிலையிலிருந்து சிந்திப்பார்களாகில் மனதார ஒப்புக் கொள்ளத்தான் செய்வர்.

ஆகவே, தி. மு. கழகம் பெரியார் அவர்களின் அறிக்கைப்படி கொடி எரிப்புப் போராட்டத்தில் கலந்துகொள்வது என்ற முடிவுக்கு வந்திருந்தால், என்னென்ன சம்பவங்கள் ஏற்பட்டிருக்கும்!

பெரியார் அவர்களின் சொல்லும் செயலும் அல்லது திராவிட கழகத்தினரின் நடவடிக்கைகளும் எவ்வாறிருந்திருக்கும் என்பவைகளுக்கு மேலே எடுத்துக் காட்டியுள்ள சென்ற கால சம்பவங்களை மனதில் கொண்டு, அரசியல் யூகத்துடன் சிந்தித்து உங்கள் கருத்துக்களை திராவிடன் ஆசிரியருக்கு எழுதி யனுப்ப வேண்டுகிறோம். அவைகளை அவ்வப்போது திராவிடன் இதழிலும் வெளியிடப்படு மென்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பம்பாய் தோழருக்கு

அன்புள்ள, இரா. ம. சண்முகராசன் (பம்பாய்) அவர்களுக்கு ஆமதாபாத் அன்பன் வரைவது:

தங்களின் மூடங்கல் 'திராவிடன்' வாயிலாக படித்தறிந்தேன். அந்த 'பரிதாபச் செய்தி' படிக்க உள்ளம் துடித்து வேதனைக் கண்ணீர் வடித்தேன் அந்தக் கண்ணீரோடு இக்கடிதம் எழுதுகிறேன். இளைஞர் உலகம் இதைப்போன்ற உண்மைச் செய்தி தன்னைக் கண்டாவது உணர்ச்சி பெற மாட்டார்களா என்ற நம்பிக்கையோடு,

அன்பரே! 'தரணியாண்ட தமிழனுக்கா இந்த இழிநிலை? என்று வினவுகிறீர்கள்! தமிழன் தரணி ஆண்டதுமட்டுமல்ல, அவன் ஓர் உண்மை உறைவிடம்! உலக மக்களுக்கு உய்ய வழிகாட்டிய பெருவிடம்! உற்றன்பு மிக்கதோர் உயர் தமிழ் வளர்த்த திருவிடம்! அவன் தனது நற்றிரு நாட்டை; பொற்றிரு மொழியை; பல்கலையை; பகுத்தறிவையுங் கொண்டு. அன்டால் அரன் செய்து ஆண்டவன். இன்று வாழ்விழந்து வதைகின்றான்; வட நாட்டிலும், தேயிலைக் காட்டிலும்,

புல்லறிவாளரிடம் தன் புலமையை அடகு வைத்து விட்டான். ஏய்த்துப்பிழைக்கும் கும்பலோடு கூடிக்கொண்டு ஆதிதாளத்தில் ஏக இந்திய பாட்டுப் பாடுகின்றான். பாடுவதோடு நின்று விட வில்லை; பகுத்தறிவையும் இழந்து ஆடுகின்றான். அந்த ஆட்டத்தில் மயங்கிய சில அரசியல் தலைவர்கள் (?), தன் பொல்லாத சிறகை விரித்து ஆடிற்றாமே, அதுபோல இவர்கள் ஆடவில்லை, ஓட விடுகிறார்கள் கையை எட்டிலே! இந்த இருபதாம் நூற்றாண்டிலும் இந்த "பிரகஸ்பதிகள்" இருக்கிறாகளே என்று நினைக்கும் போதுதான், வியப்பு மேலிடுகிறது: அதுவும் நம் தமிழ் மண்ணில் பிறந்து விட்டனரே என்கிற போது, வெட்கம் வேலாகக் குத்துகிறது.

நண்பரே! நம் தாயகத்தை விட்டு வயிற்றுப் பிழைப்புக்காக வட நாட்டிலும், தேயிலைக்காட்டிலும் மற்றும் பற்பல நாடுகளுக்கும் போய் வதையுறும் தோழர்களிலே நாமும் சார்ந்தவர்கள்தான் என்றாலும் இத்தகைய கோரக் காட்சிகளை கண்ணால் காணும்போது உள்ளத் துடிப்பு யிருக்கிறதே, சொல்லி முடியாது. இப்பொழுது நான் சொல்லப் போகும் நிகழ்ச்சி யிருக்கிறதே எப்படிப் பட்ட கல் நெஞ்சம் படைத்தோரையும் இளகவைத்து விடும்.

ஒரு நாள் காலை 9-மணிக்கு நான் கண்ட ஒரு காட்சி தன்னை — என்னவென்று சொல்வேன்! மகிழ்ச்சியை ஊட்டும் காட்சியல்ல, மனத்தை இறக்கும் காட்சி "வெங்கலக் கடையில் யானை புகுந்தாற் போல" என்று சொல்லுவார்களே அதைப் போன்று இருந்தது அந்தக் காட்சி.

நாலைந்து அதிகாரிகள்! ஒரு லாரி போலீஸ்! இன்ஸ்பெக்டா கூடத்தான். இவர்கள் குருவிக் கூடுகளைப் போன்ற அந்த சின்னஞ்சிறு குடிசைக்கு முன்னே சூழ்ந்து கொண்டிருந்தனர். இதைக் கண்ணுற்ற நான், கேள்விமேல் கேள்வியாக என்னையே கேட்டுக் கொண்டு ஒரு புறம் ஒதுங்கி நின்றேன். அருகில் வர விடுவார்களா! சிறிது நேரத்திற்கெல்லாம் குருவி பொந்துகளைப் போன்ற அந்த குடிசையிலிருந்து ஒரு பெண்ணை—தமிழ் மங்கைதான் — இழுத்து வந்து வெளியே தள்ளினான் ஒரு ஆள். அந்த மங்கையைக் கண்டால், குழந்தை பெற்று ஒரு வாரம் தான் ஆகிறது போல் தெரிந்தது.—அந்த அக்கிரமத்தை கேளுங்கள், கதறினாள் கண்ணீர் வடித்தாள்-ஏதோ காலைக்குற்றமென்று நினைக்கிறீர்களா?— இல்லை! இல்லை! "இன்னும் ஒரு வாரம் பொறுத்துக் கொள்ளுங்கையா! இவ்வூரை விட்டே போய் விடுகிறோமய்யா!" இதுதான் இந்த மறக்குல மங்கையர் கோரிக் கொண்ட மனு. தமிழில்தான் பேசினாள்--பேசினாளா? கத்தினாள், கதறினாள்.

வந்திருந்த அதிகாரிகளுக்குத் தமிழ் மொழி புரியாது. புரியாதது மட்டுமல்ல தமிழில் பேசினால், " அண்டா குடுகுடு தண்டா பாணி! அட் மதராசி!" என்று பேசுபவர்கள் ஆயிற்றே அந்த பொன் மொழியைத் தான் உதிர்த்தார்கள். அந்த அம்மையிடம் தான் என்று நினைத்து விடாதீர்கள்--அங்கு குடியிருந்த அத்தனைக் குடிசைக்கும் தான்.

முடிவாகவே சொல்லி விட்டார்கள் கையிலிருந்த தடியைக் காட்டி "நீங்கள் இங்கு இருக்கக்கூடாது. உங்களால் அசுத்தம் ஏற்படுகிறது, இங்கு அருகிலிருப்பவர்களுக்கு தொந்தரவாக இருக்கிறது. போய் விடுங்கள்" என்று கூறியதோடு "டேய்! ஏண்டா நிற்கிறீர்கள் பிய்த்தெறியுங்கள் இந்த குடிசையை, இடித்தெரியுங்கள் இந்த குட்டிச் சுவர்களை" நாடக வசனம் போல் இருக்கிறதென்று நினைக்கிறீர்களா?

குடிசைகள், மண்சுவாகள் — எல்லாம் தரை மட்டமாக்கப்பட்டன. அவர்கள் வேலை முடிந்து விட்டது,

அந்த நாதியற்றுப்போன நந்தமிழ் மக்கள் இந்த ஊரில் (ஆமதாபாத்தில்) செய்த தொழில் என்ன தெரியுமா?--உங்களுக்குத்தான் தெரியுமே இருந்தாலும், எழுதுகிறேன்:— பகல் முழுவதும் புகை வண்டி நிலையத்துக்கு அருகிலும். கடை வீதி சினிமாக் கொட்டகை, சிற்றுண்டிசாலை முன் நின்றுக்கொண்டு அங்கு வந்து போவோரை யெல்லாம் தன் இருகை நீட்டி வந்தோரை யெல்லாம் வரவேற்று வாழ்வளித்து கை நீட்டி, வாழ்த்துரை வழங்கிய வாயால் "அய்யா சேட்டு! ஒரு காலணா கொடுங்க" என்று கெஞ்சி கெஞ்சி கேட்பார்கள்; அவர்கள் காரில் ஏறும் வரையிலும் பின் தொடர்வார்கள்.

உடையோ கந்தல்! அதுவும் முழுமையும் மூட முடியாத கந்தல்!—என்னவென்று சொல்வேன் அந்த ஏந்திழைகள்படும் இன்னலை. நீங்களும் பார்த்திருப்பீர்களே அந்த மூவேந்தர் வழிவந்த மறக்குல மங்கையர்களை.

இதையெல்லாம் தங்களுக்கு ஏன் எழுதுகிறேன் என்றால், இத்தகைய நிகழ்ச்சிகளைக் கண்ணால் கண்டும், தன்மானத் தாயகம் கோரும் நம்போன்றாரை ஏசல் பாணங்களைத் தொடுத்து இடஞ்செய்துவரும் அந்த 'இழிகுணாளர்'களுக்கு இந்த செய்தி தன்னைக் காண்பிக்க மாட்டீர்களா அந்த பைந்தமிழ்த் தோழர்கள் உணரமாட்டார்களா என்றுதான்.

தெளிவில்லா உள்ளங்கள் நிறையக் காண்கின்றோம். அவர்களுக்கெல்லாம் தெளிவு ஏற்பட செய்விப்பது நம்போன்ற இளைஞர்களிடத்தில்தான் இருக்கிறது. ஆகையினால், தாங்கள் தங்கள் ஊரில் நிகழும் இத்தகைய உண்மைச் செய்திதன்னை தவறாமல் எழுதுங்கள்; அவசியப்பட்டால் நானும் எழுதுகிறேன்.

உங்கள் அன்புப் பதிலை எதிர்பார்க்கும்

அன்பன்

புதுவை. வைத்தியநாதன்

ஆமதாபாத்

★

கேள்வி? பதில்.

— அஞ்சாநெஞ்சன் —

கே: 'தினந்தந்தியை''க் கொளுத்த வேண்டும் அதை யாரும் படிக்கவே கூடாது என்று 'திராவிட கழகத்தார் சொல்லி வந்தார்களே — இப்போது பெரியார், ஈ வே ரா. நாள் தவறாமல் தினத்தந்தி நிருபருக்கு பேட்டி யளித்து வருகிறாரே—இது என்ன நியாயம்!

—எம், மூர்த்தி, எழுகிணறு,

ப: தோழரே, இப்படியெல்லாம் கேள்வி கேட்காதீர் — அதெல்லாம் பெரிய இடத்து விஷயம்!

*

கே: அய்யா அஞ்சா நெஞ்சனே, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கக்கன், ஒரு கூட்டத்தில் பேசுகையில் சுதந்திரம் பெருவதற்காக நாங்கள்தான், உழைத்தோம் ஆகவே நாங்கள் எது வேண்டுமானாலும் செய்வோம். என்று பேசியிருக்கிறாரே, அதைப் பற்றித் தங்கள் கருத்தென்ன;

—பி. பி, நாராயணசாமி, பி. கே. புதூர்.

ப: அரசியல் விவரம் அறியாத இந்த அப்பாவிகள் இப்படி பேசுகின்றனரே என பரிதாபப்பட வேண்டியதைத் தவிர வேறென்ன யிருக்கிறது.

*

கே: பெரியார் போராட்டம் நடத்தி சர்க்கார் அவர் மீது கடும் நடவடிக்கை எடுத்திருந்தால் உங்கள் தி. மு. க. என்ன செய்திருக்கும்?

—டி. அழகேசன், திருச்சி

ப: இப்படியாக ஒரு சம்பவம் ஏற்பட்டால் அப்போது கேளும் உமது கேள்வியை

*

கே: ஐயா, ஜவகர்லால் நேருவிடமிருந்து கடிதம் வந்திருப்பதால் போராட்டத்தை நிறுத்தி விட்டதாக ம. பொ. சிவஞானம் பத்திரிகையில் எழுதுகிறாரே, கடித விவரம் என்ன தெரியுமா!

—கே, நீலகண்டன், தஞ்சை

ப: நேரு பண்டிதரிடமிருந்து கடிதம் வந்திருப்பது உண்மைதானா என்பதை முதலில் தெரிந்து கொண்டு பிறகு விவரத்தை அறிய முற்படுவது நலம்.

*

கே: கார்பொரேஷன் தேர்தலில் தி. மு. க கலந்து கொள்ளுமா!

—என், நெடுமாறன், சைதை

ப: தோழரே, நகர சபைத் தேர்தலில் தி. மு. கழகம் தனது கட்சியின் பெயரால் கலந்து கொள்ளாது. கட்சியிலுள்ள தோழர்கள் தேர்தலில் போட்டியிட விரும்பினால் தனிப்பட்ட முறையிலோ அல்லது பொதுவான அமைப்பின் பேரிலோ தேர்தலில் நிற்கலாம். தி மு. கழகத்தைப் பொறுத்தவரை, நகராண்மைக் கழகத் தேர்தல்களில் இம்முறையைத்தான் பின்பற்றி வருகிறது.

*

கே: அய்யா அஞ்சா நெஞ்சனே, உங்கள் கட்சி சினிமா கட்சி என்பதில் சந்தேகமே இல்லை ஏனென்றால் உங்கள் கட்சியின் மகா சபையில் கே. ஆர். ராமசாமி, எம் ஜி. ராமச்சந்திரன், டி, வி. நாராயணசாமி, எஸ். எஸ், ராஜேந்திரன் சேர்ந்திருக்கிறார்களே அதற்காக சொல்லுகிறேன். என்ன!

—ம. திருநாவுக்காரசு. குன்றை

ப: அடா, அடா எவ்வளவு அபூர்வ ஆராய்ச்சி! அய்யா திருநாவுக்கரசரே சொல்லுவதோடு நிறுத்திக் கொள்ளாதீர் அப்படியே உமது கண்ணத்தில் நீரே இதற்காக அபராஸ் கொடுத்துக் கொள்ளும்.

சரிதச் சித்திரம் —— நெப்போலியன் வாழ்விலிருந்து:

கருவிழி உதிர்த்த கண்ணீர்!

கௌதமன்

காட்சி 1.

காலம்: கி. பி. 1806 (அக்டோபர்,

இடம்: பிரஷ்யாவின் தலைநகர் பெர்லின்—அதன் அரண்மனை.

இருப்பவர்; நெப்போலியன், பெர்லின் கவர்னரின் மனைவி, இளவரசி ஹேட்ஸ்பெல்ட்.

சூழ்நிலை: நெப்போலியனின் வீரத்தைத் தாங்கிக்கொள்ளமுடியாத பெர்லின் நகர் வீழ்ந்துவிட்டது. சரணடைந்து விட்டது. அதனை ஆண்டுகொண்டிருந்த கவர்னர் ஹேட்ஸ்பெல்ட் அந்நகரை நெப்போலியனின் காலடியில் கிடத்தி விட்டான்! ஆனாலும் மறைமுகமாக, பிரஷ்யா தேச முடி மன்னனுக்கு அவன் உளவறிவித்துக் கொண்டிருந்தான்! இந்தப் பாதகச் செயல் கண்டு பிடிக்கப்பட்டு ஹேட்ஸ் பெல்ட் ராணுவக் கோர்ட்டில் நிறுத்தப்பட்டான், இன்னும் 2 மணிநேரத்தில் அவன், தானிழைத்த குற்றத்திற்காக சுடப்படவேண்டும். இது ராணுவ மன்றத்தின் தீர்ப்பு! இந்நிலையில்தான் ஹேட்ஸ்பெல்டின் மனைவி, பெர்லின் மாளிகையிலே கண்களைக் குளமாக்கிக் கொண்டு நின்றிருந்தாள். நெப்போலியனின் வருகைக்காக! கருணை தேடக் கிளம்பி வந்த அந்தக் கருவிழியாளை நெப்போலியன் அரண்மனை வாயிலில் சந்திக்கிருள்! குதிரையினின்றும் இறங்கும்போது இந்தப்பேச்சு தொடர்கிறது.

வையம் வாழ்த்தும் பெருவீரா! யாரது? கண்ணீரும் கம்பலையுமாக...!

இளவரசி...ஹேட்ஸ்பெல்ட்

வருக! வருக! இளவரசியாரே ஏது வெகுதூரம் வந்து விட்டீர்கள்...! கணவர் விட்டுச் சென்ற பணியை!

தொடர்ந்து செய்ய வந்திருப்பதாகத் தவருக எண்ண வேண்டாம் மன்னர் மன்னவா? தங்களிடம் வந்திருப்பது ஒரு இளவரசியல்ல; சாதாரண அபலை! திக்கற்றவள்! தூக்கு மேடையை வலியச் சென்று தேடிக் கொண்ட ஒரு துர்பாக்கியவனின் மனைவி! உளவாளி யென்ற பெருங்குற்றத்திற்கிலக்காக்கப்பட்ட, கவர்னர் ஹேட்ஸ்பெல்டன் பாசத்தால், கட்டுண்ட பேதைப்பெண்! இதய ஒளியை நாடி வந்திருக்கிறேன்! எனது அருமைக் காதலன் என் அன்புப் பெட்டகம், என் வாழ்வின் ஜீவஒளி இன்று அழிந்து கொண்டே யிருக்கிறது! சில நிமிஷங்களில் அவரின் நிஜ உருவம் அழிக்கப்பட்டுவிடும். எனவே தங்களின் உத்திரவுதான் எனக்கு நல்வாழ்வளிக்க வேண்டும்! அவர் பிழை பொருத்தருள வேண்டும்!

பொருத்தருளும் அளவினதான குற்றத்தை உமது கணவர் செய்யவில்லையே இளவரசியாரே!

அதையறிந்துதான் உம்மிடம் நானே சரணடைந்திருக்கிறேன் மன்னர் மன்னவா!

உளவறிந்து சொல்பவர்கள், எந்தப் பாசறையைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும், அவர்களுக்கு எதிரானவர்களால் அவர்கள் கண்டு பிடிக்கப்பட்டு கைதியாக்கப்பட்டால், அத்தகையவர்களிடம் கருணை காட்டுவதோ அவர்களை விட்டு விடுவதோ எவ்வளவு பயங்கரமான காரியம் தெரியுமா தங்களுக்கு!

மன்னர்குல திலகமே! பிரான்ஸின் ஏகக் குரலே...! தங்களின் குற்றச் சாட்டை மறுத்துப் பேசவில்லையே நான்! இந்த ஏழைக்கு அந்த வழியும் வகையுமில்லையென்பது தாங்களறியாத தல்லவே! முறை தவறி நடந்து கொண்டார் என் கணவர்; ஒப்புக் கொள்கிறேன்—பெருந்தவறு தானிது!'

'அப்படியானல் செய்த குற்றத்திற்கு தண்டனை விதிப்பது எப்படித் தவருகும்...!

'தண்டனையைத் தவறு என்று சொல்லவில்லையே மன்னவா...... நான்! ஆனல், தண்டனை வேறு—கருணைவேறு-என்று இறைஞ்சி நிற்கத்தான் வந்திருக்கின்றேன்!

'இறைஞ்சி நின்றும் பயனுண்டாக வேண்டுமே...!!

'மாவீரா! புனித உள்ளங் கொண்டவர் தாங்களென்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன்! கருணை ஊற்றுக்களால் பொங்கி வழியும் உமது இதயத்தை கொடுமைச் சுவர்கள் மறைத்துக் கிடன்கின்றன, என்றுத் தங்கள் வைரிகளே சொன்னுலும், நான் மட்டும் நம்பத் தயாரில்லை! முடி மன்ன! மாளிகை தகர்ந்து வீழ்ந்தால், புதுப்பிக்கலாம். மணிமுடி இடறி விழுந்தால், போரிட்டுப் பெற்றுக் கொள்ளலாம்!—ஆனல் பாசத்தின் இருப்பிடம் — என் இதயக்கோயிலின் அன்பு சிலை—அழிக்கப்பட்டு விட்டால், அதை எங்ஙனம் நான்சகித்துக்கொள்ளுவேன்?......

அவரைத் தண்டித்தது அரசியல் குற்றம்!

அவரிடம் கருணை காட்டுவதும்—அதிலும் ஒரு அபலைக்காக அவளிடம் அன்பு காட்டுவதும்—ஒரு 'அரசியற் கண்ணியம்' என்று ஏனரசே தாங்கள் கொள்ளக் கூடாது?

சாமர்த்தியமாகப்பேசுகிறீர்கள்

சாமர்த்தியம் ஒன்றுமில்லையரசே...! இதுதான் என் 'ஜீவமரணப் போராட்டம்!' அவரில்லையேல் நான் வாழ்ந்துதான் என்ன பயன்? வெண்புருக்கள் ஜோடி ஜோடியாக இணைந்து பறக்கும் போதுதான் வானவீதியே எழிலுறத் தோன்றும்! வாணவில்லில் வர்ண ஜாலங்கள் இல்லாவிட்டால் அதைக் கண்டு ரசிப்பாரில்லை! ஒற்றைத் தாமரை மலரைவிட. இரட்டைக் கமலங்களுக்குத்தான் வனப்பும், கவர்ச்சியுமதிகம்! இரண்டு கால்களில் ஒன்று போனுலும், மனித வாழ்க்கையே எவ்வளவு கசப்புடையதாகிவிடுகிறதரசே! என் கணவர்—என் இதயத்தின் மூச்சாக உலவுகின்ருர். ஆனாலும் இன்று குற்றவாளியாக நிறுத்தப்பட்டு கிடக்கிருர். இங்கேதான் மன்னவரே! என்மூச்சு அடைபடுகிறது; தடைபடுகிறது. அவருக்கு மேலும், மேலும் இன்னல்கள் நேரிட்டால் அது நின்றே போய் விடும். ஆனல் அவர் வதைப்பட்டு மாண்டு மடிவதைக் காணுமுன் அந்த என் மூச்சு நின்றுவிட்டால் அதொன்றே எனக்குப் போதுமரசே. இரண்டிலொன்று என்ற சூழ்நிலையிலே நானின்று ஸ்தம்பித்துக் கிடக்கிறேன். என் சோகக் கருவிழிகள் இரண்டும் சிந்தும் கண்ணீரைக் காணிக்கையாக்கி எனது பெருமூச்சையும்—இதயத் துடிப்பையும் — இருவேறு பரிதாப விண்ணப்பங்களாக்கி தங்களின் தாள் பணிந்து மன்ருடும் நிலையில் — கெஞ்சும் நிலையில் நானின்று இருக்கிறேனரசே! எல்லாம் என் அன்புக் கணவருக்காக...!

புவியாளப் பிறந்த புகழரசே! சற்றே என்னைப்பாருங்கள்! என் அழகுக்காக அல்ல; அன்புக்காக! ஒரு தங்கையின் புனித அன்பு அண்ணனின் இருதயத்தைத் தொட முடியவில்லையென்ருல் உலகில் அண்ணன் — தங்கை முறைதான் இருந்தென்ன பயன்? தங்கையிடம் பாசமும் — அவள் கண்ணீரைக் கண்டு பரிவும்—அவளின் மனச் சோர்வையும், வேதனையையும் கண்டு கனிவும்—அன்பும் — காட்ட முடியாத அண்ணன் இப்பூவுலகிலேயே இருந்ததில்லையரசே. அரசே!என்பதும் அவ்வளவு பொருத்தமானதாகாது! அன்பு அண்ணு என்றே அழைக்கிறேன்! அருமை அண்ணு! இதோ, என் கருவிழி சிந்திய கண்ணீர்! உமது பாதங்களை அது கழுவட்டும். அதோடு என் அன்புக் கணவரையும் அது மீட்டுத் தரட்டும்!! குற்றமிழைத்தவரிடத்திலே கருணை காட்டுங்கள்...! 'கண்ணியத்தாலும், உயர்ந்தமுடிமன்னர்' என்று தங்களை இவ்வையம் வாழ்த்தட்டும்!...அருமை அண்ணு! உடன் பிறக்காமல் உரிமை கொண்டாடுகிருளே இவள் என்ற மௌனமா?... பேசுங்கள் அண்ணு...! இந்த அபலையின் கண்ணீர்க் குளத்திலே...!

நான் ஆனந்த நீராட விரும்

12-ம் பக்கம்

தேன் துளிகள்

வி. ஸ. காண்டேகர்.

●

பூசை யென்பது வாழ்க்கையின் கலசம். அதன் அஸ்திவாரமல்ல. வாழ்க்கைக்கு உண்மையான அஸ்திவாரம் பொறுமை, அனுதாபம், அன்பு.

*

இயற்கை எதிர் காலத்தை நோக்கி ஓடுகிறது. மனிதன் மட்டும் கடந்த காலத்திலே கிடக்கிருன்.

*

வாழ்க்கை என்பது போராட்டம். வாழ்க்கை என்பது வேள்வி, வாழ்க்கை என்பது கடல்.

ஆனல்

புண்ணில்லாத போராட்டமில்லை, தீயில்லாத வேள்வியில்லை, புயலில்லாத கடலில்லை.

இவற்றை யெல்லாம் சிரித்த முகத்தோடு ஏற்றுக் கொள்பவனுக்குத்தான் வாழ்க்கையின் உண்மையான கருத்து விளங்கும்.

*

உணர்ச்சி என்ருல் இயற்கை வெறியல்ல கண நேரத்திற்கு இன்பந்தரும் சிந்தனைக் கூத்தும் அல்ல எழிலோடு சேர்ந்து பாடும் உண்மையின் இனிய கீதந்தான் உணர்ச்சி என்பது

*

பயப்படும் படியாக உலகில் எதுவுமே யில்லை. ஆனல் கவலைப்படும்படியாக நிறைய இருக்கிறது

●

சாப்பாடு இல்லாமல் துடிக்கும் சிறு குழந்தைகள் கதியில்லாமல் ஒழுக்கத்தைவிற்கும் பெண்கள்—அந்த வேதனை, அந்த வறுமை, அந்த அனுதைத்தனம் அந்த சங்கடம், சேச்சே! மிருகங் கூட இந்த நிலையில் வாழாது. ஆனல் லட்சக்கணக்கான மனிதர்கள் இந்த நிலையில் வாழ்கின்றனர்.

*

தொகுப்பு: வே. சண்முகம், தஞ்சை.

கற்பனைச் சித்திரம்

மருமகள் கோகிலா!

அண்ணு அன்பன்

"சோ..."

பாலுக்காகப் பதறியழும் பச்சிளம் பாலகர்களின் அழுகுரலல்ல, பகவானுக்குப் பாலாபிஷேகம் செய்வதைக் கண்டு பக்த கோடிகள் எழுப்பிடும் பரவசக் குரலுமல்ல—மழை பெய்து கொண்டிருந்தது அப்படி!

சோ...!

மழை அடித்துக் கொண்டுதானிருந்தது; சுழற் காற்றும் பலமாக வீசிக் கொண்டுதானிருந்தது. ஆனல் வேதகிரியின் இதயத்தில் பொங்கிச் சிதறிக் கொப்பளித்துக் கொண்டிருந்த எண்ணங்கள் சூடு மட்டும் தணியவில்லை!

படார்......!

பட்டாசு வெடிக்கவில்லை; ஜன்னல் கதவுகளை அவ்வளவு வேகமாக மூடிவிட்டு தன் எதிரில் வந்து நின்ற நாகேந்திரனை எரிமலைக் கண்களோடு பார்த்தார் வேதகிரி.

நாகேந்திரா! கடைசி தடவையாகக் கேட்கிறேன் உன் முடிவுதான் என்ன? ஆணித்தரமாகக் கேட்ட வேதகிரியை துணிவோடு ஏறிட்டுப் பார்த்தான் நாகேந்திரன். அவள் என்னை நம்பி யிருக்கிருள் நான் அவளை நம்பி யிருக்கிறேன்; நீங்கள் ஊராரை நம்பி யிருக்கிறீர்கள்! ஊராரின் வாழ்த்து உங்களுக்குத் தேவை; உங்கள் மகன் வாழ்வு தேவையில்லை. அப்பா! நாளை காலை எனக்கும் அவளுக்கும் பதிவுத் திருமணம்! ரிஜிஸ்டிரார் ஆபீசுக்கு வந்து எங்கள் இருவரையும் நீங்களே வாழ்த்துங்கள்; இல்லையென்ருல் நான் இந்த வீட்டை விட்டு வெளியேற வேண்டியதுதான்......" குரலிலே உணர்ச்சி கொப்பளிக்க தான் கடைசியாக சொல்ல யிருந்ததை சிரமப்பட்டு சொல்லி முடித்தான் நாகேந்திரன், வேதகிரியின் மீசைகள் துடித்தன; அவர் இருதயம் குன்றிலே மோதிய விமானம் போல சிதறி எரிந்தது!

" சரி; நீ போகலாம்! ஆனல் நீ மீண்டும் என் முகத்தில் விழிக்கக் கூடாது என் பிணத்தைக்கூட உன் பாழும் கண்கள் பார்க்கக்கூடாது!"

"அப்பா......!"

"அந்தப் பந்தம் அறுந்து விட்டது; உனக்கும் எனக்கும் இனி எந்த சொந்தமும் இல்லை. நீ போகலாம்!"

நாகேந்திரனின் கண்களில் சீறிப் பீறிட்டுக் கிளம்பிய கண்ணீர் கரை புரண்டு அவன் கன்னங்களிலே உருண்டு மண்ணில் வீழ்ந்தது. சிறிது நேரம் வரை சிலைபோல எதையோ உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த வேதகிரியின் உருவத்தை பார்வையால் விழுங்கி தன் உள்ளத்திலே ஆழமாகப் பதித்துக் கொண்டு வெளியேறினன் நாகேந்திரன். பத்து குழந்தைகளைப் பெற்றெடுத்து பதினொன்ருவதையும் கர்ப்பப் பையில் தாங்கிக் கொண்டிருக்கும் பரிதாபகரமான தாயைப்போல, சீறியடித்துகொண்டிருந்த அப்பெருமழையில் பொலிவிழந்து கிடந்த மின்சார விளக்குகள் உமிழ்ந்துக் கொண்டிருந்தச் சோகமயமான ஒளியில் அவன் வேகமாகச் செல்வதைப் பார்த்தார் வேதகிரி; அவர் இருதயத்தில் அனல் அவிழ்ந்து புனல் பெருக் கெடுத்தோடியது—பெற்ற பாசம் !

அவன் அவருடைய ஒரே ஒரு மகன்; வாழையடி வாழையாக வளர்ந்து பெருகி வரும் அவர் பரம்பரையைச் செழிக்க வைக்கப் பிறந்த ஒரே ஒரு பசும் பயிர்! அவன் தவழ்ந்து விளையாடும் பருவத்திலேயே அவன் தாய் தவறி விட்டாள்! அன்னையின் அன்பையறியாத அவனுக்கு அன்பையும் அறிவையும் ஒன்ருக அவன் உண்ணும் அன்னத்தில் ஊட்டி அவன் ஓர் அரும்பு மீசைக்காரனக உலகத்தில் உலவ விட்டார் வேதகிரி. அவன் பி. ஏ. படித்து முடித்த போது அவர் அடைந்த அளவற்ற மகிழ்ச்சிக்கு அளவும் இல்லை—அணையும் இல்லை! தான் உயிரோடு இருக்கும் போதே மகனுக்குத் திருமணத்தை நடத்தி கொஞ்சுங் கோமளக் குரலும் அதை மிஞ்சும் மழலை மொழியும் தன் இல்லத்தில் ஒலிக்க வேண்டுமென்று அவர் எண்ணினர்; அந்தத் தணியாத ஆசை எண்ணத்தை அவனிடம் வெளியிட்டு அவன் விருப்பத்தையும் எதிர்பார்த்தார். ஆனல்—

கொட்டும் பெருமழையில் நாகேந்திரன் வேகமாக நடந்து கொண்டிருந்தான். அவன் உள்ளத்தில் எழுந்தடித்த எண்ண அலைகளின் உணர்ச்சிக் கொந்தளிப்பின் ஆவேசமான தாக்குதலால் அவன் மேலும் வேகமாக நடந்தான். அவன் கண்களுக்கு எந்தப் பொருளும் தட்டுப்படவில்லை! அவனுக்கு உலகம் இருளில் சுழன்று கொண்டிருப்பதும் புரியாது; ஒளியை நோக்கி அது சென்று கொண்டிருப்பதும் புரியாது! அவன்கண்களுக்கு இரவும் பகலும் ஒன்ருகத் தெரிந்தன; உயிர் பிண்டங்களும் உயிரற்றப் பிண்டங்களும் ஒன்ருகவே இருந்தன! அவனுக்கு உலகம் ஏதோ ஒரு பொருள்...விடுவிக்க முடியாத புதிர்! ஆம்! அவனுக்கு உலகத்தைப் பற்றியும் அந்த உலகத்தில் உழன்றுக் கொண்டிருக்கும் பொருள்களைப் பற்றியும் ஒன்றும் தெரியவில்லை—தெரியாத அளவுக்கு அவன் இருதயத்திலும் அந்த இருதயம் பிறக்க வைக்கும் எண்ணங்களுக்கும் ஒரே வெறி! அந்த வெறியின் எக்காளமிட்ட வெற்றிச் சிரிப்பிலே அவன் மேலும் வேகமாக நடந்தான்! நடந்தான்—ஓடினன்!

இன்று ஓடுவது போலவே அன்ருெரு நாள் அவன் ஓடியிருக்கிருன்! அந்த ஓட்டத்திற்கும் இந்த ஓட்டத்திற்கும் தான் எத்தனை வித்தியாசம்! வெள்ளி வான்முகட்டில் எல்லையில்லா கொள்ளை வனப்போடு பொன்னிற ஒளிவண்ணமுதை வெண்ணிலவு அள்ளி தெளித்துக் கொண்டிருந்த நேரம் அது! தவழும் குளிர்தென்றலிலே தலை துனிந்தாடிக் கொண்டிருந்த முல்லைக்கொடி. மயக்கும் நறுமணத்தை வாரி வீசி அவன் இளம் நெஞ்சந்தனை மோகலாகிரியில் மூழ்கடித்த காலம் அது! கருவிழியில் கட்டுக்கடங்காத ஆசை வெள்ளம் பெருக்கெடுத்தோட கொஞ்சும் செவ்வுதட்டில் ஆவல் அலை நெளிந்தோட ஏங்கும் இருதயத்தில் மோதிப் பொங்கும் காதல் உணர்வுடனே அவன் வரவை ஓர்சித்திரப்பாவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளையது!

அந்தச்சித்திரப்பாவை இன்றுகூடதான் அவன் வரவுக்காக ஏங்கி எதிர் பார்த்துக்கொண்டிருப்பாள்! நாகேந்திரனின் ஓட்டம் அதிகரித்தது; அவன் கால்கள் பந்தயக் குதிரையோடு போட்டிபோடுவது போல் பாய்ந்து கொண்டிருந்தன!

"அத்தான்...!" காரிருளைப் பிளந்து ஓர் குரல் வானத்திலேயும் கார்மேகத்தைக் கிழித்தெறிந்து ஓர் மின்னல்! நாகேந்திரனுக்கு அந்தக்குரல் கேட்கவில்லை; அவன் ஓடிக்கொண்டுதானிருந்தான்!

"அத்தான்...!" மழையில் சப்தத்தைத் தவிர வேருென்றுமே கேட்காத அந்த பயங்கரமான நேரத்தில் மீண்டும் கிளம்பியது அந்தக்குரல்! நாகேந்திரன் நின்ருன்! மகுடி ஓசை கேட்டு படமெடுத்து நிற்கும் நாகத்தின் நிலைபோல அசையாமல் சிலைபோல நின்ருன்! அந்தக் குரலுக்குத்தான் எத்தனை சக்தி! அவன் வெறித்தனத்தையே பிடித்திழுத்து அவனை ஓர் நிதானத்திற்குக் கொண்டுவந்து விட்டதே!

"அத்தான்..."

நாகேந்திரன் திரும்பிப்பார்த்தான்.

"கோகிலா!"

அவன் அணைப்பிலே கோகிலா இருந்தாள்!

"அத்தான்! ஏன் இப்படி ஓடிக்கொண்டிருக்கிறீர்கள்!" அவள் கேட்டாள்.

'உனக்காகத்தான்! கோகிலா! உலகம் நம் காதலை வாழ்த்தவில்லை. அப்பாவின் சம்மதம் கிடைக்கவில்லை; வீட்டை விட்டு வெளியேறிவிட்டேன்!'

"நான்கூடதான் அத்தான்! உங்கள் வீட்டை நோக்கியே வந்து கொண்டிருந்தேன். நீங்களே எதிர்பட்டுவிட்டீர்கள்! வாருங்கள் அத்தான் போவோம்!"

மழையின் சீற்றம் இன்னும் தணியவில்லை அவனும் அவளும் இரண்டு மைல்களுக்கு அப்பாலிருக்கும் புகைவண்டி நிலயத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் உள்ளத்தில் ஓர் அசைக்கமுடியாத உறுதி பரவியிருந்தது; வழியில் கோகிலா அவனிடம் சொன்னள். அத்தான் அந்தப்பாவி பரமசிவன் தொந்தரவை என்னல் சகிக்கமுடியவில்லை. அண்ணனையும் அவன் வசப்படுத்திவிட்டான் இன்றிரவு வீட்டில் நான் தங்கி விட்டிருந்தால் கட்டாயம் அவன்..."

நாகேந்திரன் கோகிலாவை பலமாக அணைத்துக் கொண்டான். அந்த அணைப்பில் ஓர் பாதுகாப்பை கோகிலா உணர்ந்தாள்; நாகேந்திரனின் இடுப்பில் ஓர் கரம் கொடுத்தணைத்தவாறே நடந்தாள். நாகேந்திரனின் உள்ளத்தில் ஓர் புதுத்திருப்பம்....அவன் சீமான் மகன்; வேதகிரியின் செல்வமகன்! இருந்தும் என்ன பயன்! திருமணத்தைப் பற்றிக் கேட்ட அவரிடம் கோகிலாவைப் பற்றிச் சொன்ன போது அவர் வேல் பட்ட வேங்கையென சீறிஎழுந்தார்! காரணம் அவள் பஞ்சையின் பெண் என்பது மட்டுமல்ல., அவர் குலகவுரவத்திற்கு ஏற்ற குமரி அல்ல! அவளுக்குப் பெற்ருேர் இல்லை; ஓர் அண்ணன் மட்டும்தான் இருந்தான். ஏதோ ஓர் பஸ் கம்பெனியில் அவனுக்குக் கண்டக்டர் வேலை! நாகேந்திரன் எத்தனை முறை அவரிடம் கோகிலாவின் அருங்குணத்தைப் பற்றிச் சொன்னன்—அவர் அதைப் பற்றி அக்கரை எடுத்துக்கொள்ளவில்லை. அவன் அழகைப் பற்றிக் கூறினன்—அதை அனுபவித்து விட்டானென்று அவர் கூச்சலிட்டார். பிறகுதான் அவன் பாசத்தைத் துறந்து கோகிலாவின் கரம் பற்ற முடிவுசெய்தான்...

அவனும் அவளும் வேகமாக நடந்தார்கள், கோகிலாவின் உள்ளத்தில் பரமசிவமும் அவன் அண்ணனும் அடிக்கடி முகம் காட்டி அவள் உடலை நடுங்கச் செய்துக் கொண்டிருந்தார்கள்! அவள் அண்ணன் மானமற்றவன்! எத்தனையோ தங்கைமார்களுக்கு சகோதர வாஞ்சைக் கொண்ட அண்ணன்மார்கள் இருக்கிருர்கள்! சினிமாபடத்திலும் அவள் பார்த்திருக்கிருள்! ஆனல் அனல் அவன் அண்ணன்...தன் உத்தியோக உயர்வுக்காக தன் கம்பெனி முதலாளியின் மகன் பரமசிவத்திடம் அவளைப் பணயம் வைக்க முயற்சிக்கிருன் அந்தப் பாவி...!

திடீரென்று மூன்று ஜதை முரட்டுக்கரங்கள் நாகேந்திரனைச் சேர்த்துப் பிடித்து கீழே அமுக்கின! கோகிலா இதயம் பதற வீறிட்டாள்! அவள் சந்தன நிற கட்டுடலை ஓர் முரடன் பூச்செண்டைப் போல் தூக்கிக்கொண்டான்! கோகிலாவின் கதறல் வானைப் பிளந்து ஓய்ந்ததே தவிர வேறு யார் துணைக்கும் உதவவில்லை. நாகேந்திரனை அமுக்கிக் கீழே உருட்டிவிட்டு அவன் மார்பின் மீது பலமாக எட்டி உதைத்தான். கோகிலாவின் அண்ணன்! ஆம்! அவன்தான் முதலாளி மகன் பரமசிவம் வெறி கொண்ட நாய் போல குறைத்துவிட்டு அவன் மண்டையின் மீது ஓர் பெரிய பாறைக் கல்லைத் தூக்கிப் போட்டான்! மறு நிமிஷம் நாகேந்திரன் அலறல் சிறிது தூரத்திலிருந்த பாழ்மண்டபத்தில் மோதி தொங்கிக் கொண்டிருந்த வௌவால்களைச் சிதறடித்தது!

மழையின் வேகம் தணியவில்லை அன்றைக்கு அதற்கென்னமோ அவ்வளவு வெறி! வேதகிரி படுக்கையில் புரண்டுப் பார்த்தார்; சுருண்டுப் படுத்தார் இமைகளைக் கெட்டியாக மூட முயற்சித்தார்; தூக்கம் வரவில்லை மூடிய விழிகளில் சூழ்ந்த கடும் இருளில் நாகேந்திரன் தான் சிரித்துக் கொண்டி

8-ம் பக்கம்

புராணங்கள்!

○

குப்பை : குப்பை என்று வழங்கப்படும் ஏட்டுச் சுவடிகளில் பேர் பெற்று விளங்குவன புராணங்கள். புராணங்கள் தமிழ் நாட்டின் முதல் நூல்களல்ல. புராணங்கள் வேறு உலகினின்றும் நந் தமிழ் நாட்டிலே குடியேறினவை புராணமென்னுஞ் சொல்லே தமிழ்ச் சொல்லன்று.

கீழ்நிலை :— உலகில் ஒருவனுக்கும் ஒருத்திக்கும் பிறக்கும் குழந்தை போல் சிவனுக்கும் உமைக்கும் முருகன் பிறந்தான் என்று கருதுவோர் மிகக் கீழ்நிலையிலிருப்போர்.

—தமிழ்ப் பெரியார் திரு. வி. க,

திராவிடன்

சென்னை : 5—8—55 : வெள்ளி

இந்திக்கு இங்கே ஆதிக்கமா?

★

1938-ம் ஆண்டு, ஆச்சாரியார் அவர்கள் தர்பார் சுந்தரராகக் காட்சியளித்த போது, அவரின் கோளாக் காதர் ஆட்சி தென்னாட்டுக்குச் செய்த மகத்தான துரோகம் தான் "கட்டாய இந்தி" திட்டமாகும், அன்று விதைக்கப்பட்ட இந்தி ஆதிக்க வெறியானது இடையிடையே சற்று தணிந்துள்ளதைப் போல காணப்பட்டாலும் மறைமுகமாக தனது ஜபர்தஸ்தைக் காட்டிக் கொண்டேயிருந்து கடந்த ஏழெட்டு ஆண்டுகளாக ஏக இந்தியா என்ற போர்வையிலும் சுதந்திர சுயராஜ்ய குடியரசு ஆட்சி என்ற பெயராலும் இன்று தென்னாட்டில் தனது ஆதிக்கத்தின் கைவரிசையைக் காட்ட துவங்கி விட்டது!

வரவர மாமி கதையைப்போல ரயில்வே போர்டுகளில் இந்தி, தபால் கார்டு கவர்களில் இந்தி, நாணயங்களில் இந்தி, என்பதாக வளர்ந்து இன்னும் சில காலம் சென்றால் தென்னாட்டினரின் முகத்தில் கூட இந்தியில் ஒரு முத்திரைப் போட்டு வைக்கப்பட்டாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்தி வெறியர்களின் ஆதிக்கத்தை ஏற்கனவே அளவிட்டு, 1938-ம் ஆண்டில் அறப்போர் நடத்திய தன்மான இயக்கத்தை அன்றைய முதலமைச்சர் ஆச்சாரியார் அடக்கு முறை துணை கொண்டு அடக்கப் பார்த்தாரே யல்லாது எதிர்காலத்தில் இந்தி ஆதிக்க கும்பலால் தென்னாட்டுக்கு ஏற்படப் போகும் அவல நிலையை அறிவுடைமை கொண்டு சிந்தித்துப் பார்க்க முயற்சித்தாரில்லை. ஆனால் 16 ஆண்டுகளுக்குப் பிறகு அதே ஆச்சாரியார் தமது இனத்தவரின் குரல்வளையையே இந்தி ஆதிக்கம் பிய்த்துத் தள்ளுகிறது என்பதற்காக இந்தி மொழி ஆதிக்கத்தைக் கண்டு அலறுகிறார். இந்த உணர்வு அன்று ஓரளவாவது இருந்திருந்தால் வடநாட்டு ஏகாதிபத்யம்மொழித் துறையில்கூட தென்னாட்டினை அடிமைப் படுத்தும் முரட்டுத்தனம் தலைகாட்டி யிருக்க முடியாது.

ஆச்சாரியார் அன்று செய்த பெருந் தவறையே 1954-55-ம் ஆண்டு தர்பார் சுந்தரராய் விளங்கும் காமராசர் செய்யத் துணிந்திருக்கிறார்.

தென்னாட்டுக்குக் கிடைத்துள்ள சுதந்திரம், அச்சுதந்திர ஆட்சியை நடத்திச் செல்பவர்களின் மகா நிபுணத்துவம் ஆகியவைகளுக்கெல்லாம் ஏதாகிலும் எடுத்துக்காட்டு ஒன்று இருக்கிறதென்றால், தம் சொந்த மாநிலத்தின் அரசியல் உரிமையிலிருந்து மொழிவளம் வரை அனைத்தையும் டெல்லி தேவதைகளுக்கு அடிமைப்படுத்தித்தரும் வேலையில் தங்களின் அபார திறமையைக் காட்டி சபாஷ் பட்டம் பெறுவதாகவே யிருந்து வருகிறது. ஆதலால்தான் ஆச்சாரியாரைவிட காமராசர் நேரு பண்டிதரிடம் "நற்சாட்சிப் பத்திரம்" வாங்குவதில் முனைந்து நிற்பதாகத் தெரிகிறது.

தென்னாட்டின் மீது இந்தி மிக நாசுக்காகத் திணிக்கப்படுவதை சமயம் நேரும் போதெல்லாம் கல்வி நிபுணர்களும், பல்கலைக் கழகத் துணை வேந்தர்களும் ஆசிரியர்களும் பொதுவாக திராவிட இயக்கத்தினரும் மனவேதனையுடன் எடுத்துக் காட்டிக் கண்டித்திருப்பதைப்பற்றி முதலமைச்சர் காமராசர் அவர்கள் உண்மையிலேயே உணர்ந்தோ—அல்லது மதித்தோ யிருப்பாரானால், பெரியார் அவர்கள் கேட்ட உறுதி மொழிக்குப் பதிலாக அரசியல் சட்டங்களைப்பற்றி கற்பிக்க முனைந்திருக்கமாட்டார்.

இந்திய அரசியல் சட்டத்தைப்பற்றி தாம் பிறர்மூலம் தெரிந்து கொண்டிருப்பதைவிட இந்தியை எதிர்ப்பவர்கள் தாங்களாகவே மிக நுணுக்கமாக அறிந்திருக்கின்றனர் என்பதை காமராசர் அறியாதது வருந்தத்தக்கதாகும்.

அதுபோலவே, இந்திய ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் அவர்கள் மட்டுமல்லாது இந்திமொழி ஆதிக்க நாலாந்தர ஆட்கள்கூட தென்னாட்டின் மீது இந்தி கட்டாயமாகத் திணிக்கப்படாது என்று கீரல் விழுந்த இசைத்தட்டுபோல கூப்பாடு போட்டு வருவதை முதலமைச்சர் காமராசரைவிட இந்தி எதிர்ப்பாளர்கள் நன்கு அறிவர்.

எனவே டெல்லி தேவதைகள் ஓதும் மந்திரத்தை மனப்பாடம் செய்து கொண்டு வந்து அதை அப்படியே இங்கு ஒப்பிப்பதினால் இந்தி எதிர்ப்புப் பிரச்னை தீர்ந்து விட்டதாகாது.

இந்தி தென்னாட்டின் மீது கட்டாயமாகத் திணிக்கும் எண்ணம் இல்லை—சட்டத்திலும் அதற்காவன செய்யப்பட்டிருக்கிறது என்று பசப்பிக் கொண்டே, நாம் மேலே எடுத்துக் காட்டி யுள்ளதைப் போன்று அஞ்சல் அட்டைகள் வரை இந்தி ஆதிக்கம் தலைவிரித்தாடத் தொடங்கி விட்டது.

இந்த விபரீதப்போக்கிற்குக் காரணமாயிருக்கும் கும்பலைத் தட்டிக் கேட்கும் துணிவற்ற காமராசர் அவர்கள் மற்றவர்களுக்கு சட்டப் பாடம் கற்றுக் கொடுக்க முனைவதும்—உருட்டல் மிரட்டல்களைக் கையாள எண்ணுவதும் அறிவுடைமையாகாது என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதைவிட இந்திப் பிரச்னையானது எங்களுக்குள்ள அதிகார எல்லைக்கு அப்பாற்பட்டதாகும்—நாங்கள் ஒன்றும் செய்வதற்கில்லை யென்று நேர்மையுடன் கூறின் அதை யாரும் தவறாகக் கொள்ள முடியாது.

எனவே, தலைவிரித்தாடும் இந்தி ஆதிக்கக்காரர்களுக்கு இனியாகிலும் சென்னை சர்க்கார் நல்லறிவு புகட்டித் திருத்த வேண்டுகிறோம். அதைவிடுத்து தீட்டிய மரத்திலேயே கூர்பார்க்கும் செயலில் இறங்குவதானது ஆட்சிபீடத்தினர் தாங்களாகவே வம்பை விலைக்கு வாங்கியதாக முடியும் என்பதை சென்னை அரசியலாருக்கும் குறிப்பாக முதலமைச்சர் காமராசர் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மகிழ்ச்சிக்குரிய செய்தி

'திராவிடன்'

தனது பயணத்தில் 9-ம் ஆண்டினை 19-8-55-ம் நாளன்று துவக்குகிறான்

தி. மு. கழகக் கொள்கை வெற்றியுறும் வகையிலும், தனது சக்திக்கியன்ற அளவு—கூடுமானவரை புத்தம் புதிய அம்சங்களுடனும் பணியாற்ற உறுதி கொண்டுள்ள திராவிடனுக்கு உங்கள் பேராதரவை தொடர்ந்து தந்துதவ வேண்டுகிறோம்.

பிற விவரம் அடுத்த வாரம் காண்க.

—நிர்வாகி—'திராவிடன்'

துறையூரில் பொதுச்செயலாளர்

7—8—55 ஞாயிறு மாலை 6-மணிக்கு துறையூர் தி. மு. கழக ஆதரவில் மாரியம்மன் கோயில் மைதானத்தில் பொதுச் செயலாளர் இரா, நெடுஞ்செழியன் அவர்களை வரவேற்று மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெறும் தோழர் து. ப. அழகமுத்து தலைமை வகிப்பார். திருச்சி மாவட்டச் செயலாளர் அம்பில் தர்மலிங்கம் அவர்களும் பொதுச் செயலாளருடன் இக் கூட்டத்தில் கலந்து கொள்வார். மாலை 4-மணிக்கு ஊர்வலமும் நடைபெறும்.

திருச்சி மாவட்ட தி. மு. கழகம் செயற்குழு கூட்ட அழைப்பு

அன்புடையீர்! வணக்கம். நாளது 7—8—55 ஞாயிறு மாலை பிற்பகல் 3-மணிக்கு துறையூர் தி. மு. கழக அலுவலகத்தில் பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள் முன்னிலையில் மாவட்ட செயற்குழு கூட்டம் நடைபெறும், அனைவரும் தவறாது வர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:— மாநில மாநாட்டு நிதி வசூல், வரவு செலவு, புதிய கழகங்கள் பதிவு, வட்டக்குழு அமைப்பு, பொதுக்குழு உறுப்பினர் தேர்தல்,

அன்பன் A. P தர்மலிங்கம், செயலாளர்.

அரியாங்குப்பம் தி. மு. கழகத் திறப்பு விழா!

7—8—55 மாலை 6 மணிக்குப் புதுவைக் கடுத்த அரியாங்குப்பத்தில் தி. மு, க. நகரக் கிளையின் திறப்பு விழா. தோழர் ச. சிவப்பிரகாசம் அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, வாணிதாசன் ஆகியோர் கொடியேற்றி வைத்தும், கழகத்தைத் திறந்து வைத்தும் சொற்பொழிவாற்றுவர். புதுவை டி. லோகநாதன் குழுவினர் இசை விருந்தளிப்பர்.

திரு. வி. க. பிறந்ததின விழா கூட்டம்

திரு. வி. க. மறுமலர்ச்சி மன்ற சார்பில் 14—8—55 ஞாயிறு மாலை 6—மணிக்கு திரு. வி, க. திடலில் (கான்ரன்ஸ்மித் நகர் மைதானம்) தோழர் க. வரதன் அவர்கள் தலைமையில் நடைபெறும். அதுசமயம் தி. மு க. துணைப் பொதுச்செயலாளர் என். வி நடராசன், கவிஞர் கண்ணதாசன், த. நா. கா. உறுப்பினர் பி. ஸி. கல்யாணசுந்தரம், வலையாபதி ஜி. முத்துகிருஷ்ணன், டி. எஸ். சண்முகம், கதிர் டி. சுப்ரமண்யம் பேசுவர்.

மாநில மாநாட்டிற்குப் பம்பாயின் பங்கு ரூபாய் 555.

●

வசூல் விவரம்

பம்பாய் தி. மு. க.	ரூ.	அ.	பை.
தாராவிக் கிளை	174	5	0
பாண்டுப் ,,	65	0	0
மாதுங்கா ,,	50	0	0
காந்தவல்லி கிளை	40	0	0
அந்தேரி ,,	30	0	0
தானா ,,	25	12	0
கொலாபா ,,	25	0	0
சௌந்திரபாண்டியனார் பகுத்தறிவு மன்றம்—தாராவி	10	0	0
மலாடு கிளை	5	7	6
தாளமுத்து நடராசன் நினைவுப் படிப்பகம்—தாராவி	5	0	0
ப. தி. மு. க. தலைமை நிலையம்.	124	7	6
	555	0	0

அந்த மனப்பான்மை!

—→ ச. வெ. பாண்டியன் ←—

மனப்பான்மையை வளர்க்க வேண்டுமாம்—கூறுகிறார் கனம் மந்திரி அவர்கள்! எந்த மனப்பான்மையை!

மக்கள், மந்திரி சொல்லை மதிக்க வேண்டும் என்னும் மனப்பான்மையையா! தமக்கு மூத்தோரை தக்க மரியாதையுடன் அழைக்க வேண்டும்—மூத்தோர்சொல் கேட்க வேண்டும் என்பன போன்ற மனப்பான்மையா வளர்க்க வேண்டும்! இது அல்ல அவ' வேண்டுவது. ஒரு மந்திரி—அதுவும் மத்திய சர்க்காரின் குட்டி மந்திரியா இப்படிப் பட்ட சாதாரண—அற்ப விஷயங்களில் தலையிடப் போகிறார்! பின்னர் எந்த மனப் பான்மையைத்தான் அமைச்சர் குறிப்பிடுகிறார்!

இருவருக்கும் சமபங்கு எனப் பிரிக்கக் கூடாது நமது சொத்தை! எனக்கு முக்கால் பங்கு உனக்குக் கால் பங்கு போதும்! ரொக்கப் பணத்தைப் பங்கிடுதலிலும் எனக்கு முக்காலே அரைக்கால் பங்கு வேண்டும், உனக்கோ அரைக்கால் பங்கு போதும்! வீட்டுப் பாகத்தை பங்கு போடும்போது அதை எனக்கே கொடுத்துவிட்டு நீ வேறு ஏதாவதொரு வீட்டில் போய் இருந்து கொள்! என்ன நான் சொல்வது புரிகிறதா தம்பி! ஏன் முணுமுணுக்கிறாய்! நான் உனக்கு அண்ணன்தானே, அண்ணன்தானே என்ற மனப்பான்மை வேண்டும் தம்பி.

அண்ணன் என்பதற்காக தம்பியையே ஓட்டாண்டியாக்கிடும் அந்த மனப்பான்மை வேண்டுமாம் அல்ல அல்ல வளர்க்க வேண்டுமாம்! இப்போது புரிகிறதா அமைச்சர் வளர்க்க வேண்டும் என்று விரும்பியது எந்த மனப்பான்மையை என்பது.

'எல்லா அபிவிருத்தித் திட்டங்களும் வடநாட்டிலேயே இருக்கின்றன. தென்னாட்டில் ஒன்றுமில்லை என்று பிரச்சாரம் செய்வது தவறு, ஒரு இடத்தில் நடக்கும் வேலை தேசம் பூராவுக்கும் நடக்கும் வேலையே என்ற மனப்பான்மையை வளர்க்க வேண்டும்' (ஜுன், 13 சு. மி.) என்று பேசி யிருக்கிறார் மத்திய சர்க்கார் ரெயில்வே போக்குவரத்து உதவி அமைச்சர் ஓ. வி. அளகேசன் அவர்கள்.

தி. மு. கழகத்தாராகிய நாம் 'தென்னாடு வஞ்சிக்கப்படுகிறது, வடநாட்டிலோ வளர்ச்சியுறும் திட்டங்கள்' என்று பகிரங்கமாகக் குற்றஞ் சாட்டி வருகிறோம் அல்லவா அதற்காகத்தான் மந்திரியார் எங்கு என்ன நடந்தால் என்ன, எல்லாம் நமக்குத்தானே 'என்னும் மனப்பான்மையைக் கொள்ள வேண்டும் என்கிறார். தண்ணீர்த் தாகம் அதிகமாக இருக்கிறது நீகுடித்துவிட்டு எனக்குக் கொஞ்சம் கொடு என்றுகேட்டால் நான் குடித்துவிட்டேனல்லவா பின்னே நீயும் குடித்த மாதிரிதானே என்று கூறுபவனைப்போல பேசுகிறார் அமைச்சர்!

தென்னாட்டில் தொழில்துறை வளர்ச்[illegible]றிதேனும் அக்கரை காட்டப்ப[illegible]லை என்று நாம் வேண்டுமென்றுகு[illegible] கூறி வருகிறோம். இல்லையே! அப்படியானல் ஆவடியில் கூடிய காங்கிரஸ் மாநாட்டிலே அம்புஜத்தம்மாள் அவர்களின் பேச்சும், கோவையில் நடந்த ஐந்தாண்டுத் திட்ட விவாத அரங்கிலே மந்திரி சுப்பிரமணியம் அவர்களின் பேச்சும், குற்றாலத்தில் கூடிய காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானமும், சுதேசமித்திரன் கார்ட்டூன்களும் வரைந்த தலையங்கங்களும் எழுந்திருக்க நியாயமில்லையே! நம்பக்கத்திலே உண்மை யிருக்கிறது, என்பதைத் தானே மேற்கண்ட சம்பவங்கள் விளக்குகின்றன,

ஏன்! வேறு எல்லாக் குற்றச்சாட்டுகளையும் விட்டுவிட்டு நெய்வேலி திட்டத்தை மாத்திரம் எடுத்துக் கொண்டு பாருங்களேன்—இந்திய சர்க்கார் காட்டி வரும் அலட்சியத்தன்மைக்கு.

பலவருடங்களாக பிரச்னை எழுப்பப் பட்டும் பார்ப்பாரற்றுக் கிடந்தது நெய்வேலி! கடந்த வருடத்தில் ஒரு ஆராய்ச்சிக் குழுவினர் பரிசீலனை செய்து 200 கோடி டன் பழுப்பு நிலக்கரி இருப்பதாகவும் இதைப் பயன்படுத்தினல் தென்னாடு நல்ல தொழில் வளர்ச்சியுறும் என்ற விபரத்தை வெளியிட்டது, அது பரபரப்பாக இருந்தது தென்னாடெங்கும்! சட்டசபைகளிலே பிரச்னைகளைக் கிளப்பினர்! எனினும் சரக்கார் ஆமை வேகம் காட்டி அதோ இதோ என்ற படலத்தோடு நிறுத்திக் கொண்டது!

பின்னர் மத்திய மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் சென்னை வந்திருந்தபோது அதுபற்றி எல்லோராலும் பிரஸ்தாபிக்கப்பட்டது. கனம். டி, டி. கே. நெய்வேலித் திட்டம் பகற் கனவு. அங்கே நல்ல நிலக்கரி இல்லை. தாதுப் பொருள்கள் இல்லை, இரும்பு இல்லை எனவே திட்டமும் இல்லைஎன்று அறிவித்து விட்டார்.

ஜெர்மன் நிபுணர் ஒருவர் ஒரு எம் எல், ஏ.க்கு எழுதிய கடிதத்தில் நெய்வேலியில் கிடைப்பது நல்ல நிலக்கரி, அதைக் கொண்டு இரும்புத் தொழிற்சாலையை நிறுவ முடியும். சேலத்தில் இரும்பு கிடைப்பதால் இத்தொழிலுக்கு நல்ல சிலாக்கியம் இருக்கிறது. நெய்வேலிக்கும் சேலத்திற்கும் இடையே உள்ள 60 மைல் தூரத்தைப் பெரிதென மதிக்காது செயலாற்றினல் சிறந்த முன்னேற்றமிருக்கும் என்று விளக்கி யிருந்தார். அதைக். காட்டி தென்னாட்டுக் கனத்தொழிலுக்கு ஆதரவு தாருங்கள் என்று கேட்டபோதும் வாய்மூடி மவுனிகளாகிவிட்டனர்.

கனத் தொழிற்சாலைக் குண்டான தாதுப் பொருள்கள், மற்றும் வசதிகள் இருந்தும் போதிய கவனம் செலுத்தப் படவில்லை. நமது குறைபாட்டை எல்லாம் குதர்க்கவாதம் என்றுதான் பேசினரே தவிர ஊக்கம் காட்டியதில்லை. நிபுணர்களின் ஆராய்ச்சிகளை யெல்லாம் அலட்சியமாக எண்ணினர்! எனவே தான் திட்டம் பேரளவிற்கு நடந்து கொண்டு வருகிறது.

இதற்கிடையில் குற்றாலத்தில் பேசிய டி. டி. கே. அவர்கள் தென்னாட்டில் மூதலீடு செய்ய பணக்காரர்கள் இல்லை. மூலப்பொருளும் இல்லை' எனவே திட்டம் தீட்ட வழி இல்லை என்று பேசி விட்டார். ஜுன் 13-ந் தேதிய அதே பேச்சில் மந்திரி ஓ. வி' அளகேசன் அவர்கள் ஏதோ கருப்பாக நிலக்கரி மாதிரி ஒரு பொருள் கிடைத்தால் இங்கே இரும்புத் தொழிற்சாலை நிறுவுங்கள் என்கின்றனர் என்று நம்மைக் கிண்டல் செய்தார்.

இரு மத்திய மந்திரிகளும் மனதில் கொண்டு பேசுவது நெய்வேலித் திட்டத்தைத்தான் மூதலிடுவோரும் இல்லை, மூலப் பொருளும் இல்லை என்று ஒரேயடியாகக் கூறி நிபுணர்களின் கூற்றையெல்லாம் மிதித்துத் தள்ளுகிறார், டி. டி. கே., ஓ. வி. அளகேசன் அவர்களோ நிலக்கரி இல்லையே! ஏதோ கருப்பா மண் இருக்கிறது என்பது போல் என்ன ஆராய்ச்சியாளர்கள் என்று நினைத்து தனது மேதாவித் தனத்தைக் காட்டுகிறார்.

மந்திரிகளின் பத்தாம்பசலிப் புத்திதான் மந்திரிபதவி என்னும்ஆசைதான் இவர்களை இப்படியெல்லாம் தான் தோன்றித்தனமாகப் பேசச் செய்கிறது என்பது ஏற்கனவே விபரமறிந்தோர் அறிந்த ஒன்று. தி, மு. கழகத்தாராகிய நாம் முன்பே உணர்ந்த ஒன்று. இதோ மேலும் அதுபற்றி நிபுணரின் விளக்கம் கிடைத்திருக்கிறது பாருங்கள்!

தென்னாற்காடு ஜில்லா நெய்வேலி பழுப்பு நிலக்கரியை வர்த்தக ரீதியில் பயன்படுத்த முடியும் என்று இத் திட்டம் பற்றி ஆலோசனை கூற நியமிக்கப் பட்ட அயல்நாட்டு கம்பெனி மத்திய சர்க்காருக்கு அறிவித்திருக்கிறது.

இக்கம்பெனி நிபுணர்கள் திட்டப்படி வருஷம் 30 லட்சம் டன் பழுப்பு நிலக்கரி தோண்டி எடுக்கலாம். இதை உபயோகித்து வருஷம் 11 லட்சம் கே. டபிள்யூ மின்சார உற்பத்தி செய்யலாம் மேலும் வருஷம் 2 லட்சம் டன் அம்மோனியம் சல்பேட் உற்பத்தி செய்யலாம். வீடுகளுக்கு எரிபொருளாக உபயோகிக்க 7 லட்சம் டன் நிலக்கரி தயாரிக்கலாம்,

இத்திட்டப்படி இங்கு கனிப்பொருள் எடுக்க தொழிற் சாலை ஒன்றும், மின்சார உற்பத்தி நிலையமும், உர உற்பத்தி தொழிற்சாலை யொன்றும் கட்ட வேண்டும்...... —ஜுலை 26, சு. மி.

கருப்பு மாதிரி நிலக்கரி என்று பேசிய கனம் ஓ, வி, அளகேசருககும் மூலப் பொருள் இல்லை என்று குறைபாடிய டி. டி. கே, அவர்களுக்கும் இதை முன் வைக்க ஆசைப்படுகிறோம். என்ன பதில் சொல்வார்கள் இதற்கு.

வடநாட்டிலே இப்படியொரு இடம் கிடைத்தால் போதும் வேகமாக வழி தேடி காரியத்தை முடித்திருப்பர். யுத்த காலப் பிரகடனம் கூடச் செய்து அவ்வளவு துரிதமாக காரியத்தை நடத்தி இருப்பர், ஆனல் நிலக்கரி கிடைப்பது தென்னாட்டில் அல்லவா, பின் எங்கே அந்த மனம் வரும்.

வடநாட்டுக்காரர்கள் அங்கேதான் வளப்படுத்த வேண்டும் என்று வேண்டுமென்றே வீராவேசம் காட்டி வருவதும், தென்னாட்டிலுள்ள மந்திரிகளும் அம்மாஞ்சிகளாக இருந்து தங்களது பதவி ஆசைக்காக தலையாட்டி வருவதும்தானே தென்னாடு புறக்கணிக்கப் படுவதற்குக் காரணம், வடவர்களுக்கு நல்ல மனப்பான்மை இருக்குமானல்—வடக்கு வஞ்சிக்காது என்ற மனப் போக்கு இல்லை என்பதைக் காட்ட நினைக்குமானல் இதை நல்ல முறையில் பயன்படுத்தி இருக்கலாமே. தென்னாட்டு மந்திரிகளுக்கு சொரணை—தன் மதிப்பு இருந்திருக்குமேயானல் நெய்வேலி நிலக்கரியையும் சேலத்து இரும்பையும் பயன்படுத்தி பெரிய தொழிற்சாலையை உண்டாக்கி இருக்கலாமே!

ஏன் செய்யவில்லை டில்லி! எதற்காக எக்கேடும் கெட்டுப் போகட்டும் என்றிருக்கிறது வடவர் ஆட்சி! வேண்டும் என்றே காட்டும் ஓரவஞ்சனை ஏன்! நேரிடையாகவே கேட்கிறோம் பதில் சொல்லுங்கள், ஏன் மௌனம்!

சமீபத்தில் ரூர்கலேயில் தாதுப் பொருள் இருக்கிறது எனக் கண்டதும் ஓடோடி எவ்வளவு துரிதமாகப் பணியாற்றுகிறது டில்லி! நேரடியில் கவனித்தல் வேறு, நேரடி மூலதனம் வேறு, ரஷ்ய நாட்டு நிபுணர்களின் ஆராய்ச்சி உதவி ஒரு பக்கம், வளர்ந்து வருகிறதே — தொழிற்சாலை முயற்சி. அந்த ஊக்கம் ஏன் நெய்வேலி விஷயத்தில் காட்டப்படவில்லை.

நிலக்கரி இல்லையா! இரும்பு இல்லையா! மின்சார உற்பத்திக்கு வழிஇல்லையா! அமோனியம் சல்பேட இல்லையா எல்லாம் இருக்கிறது லட்சக் கணக்கில் என்றெல்லவா கூறுகிறார்கள், ஆராய்ச்சியாளர்களும்—வெளிநாட்டுக் கம்பெனிகளும். 60 கோடி ரூபாய் இருந்தால் போதுமாம் திட்டம் நிறைவேற. இப்படியும் கூறுகிறது—அந்த அயல்நாட்டுக் கம்பெனி

பக்ரா நங்கல் அணைக்கட்டுத் திட்டத்திற்கும், ஹிராகுட் அணைக்கட்டுக்கும், தாமோதர் திட்டத்திற்கும், சித்தரஞ்சன் ரயில்வே தொழிற்சாலைக்கும் பெரம்பூர் 'கோச்' தொழிற்சாலைக்கும் ரூர்கலே திட்டத்திற்குமாக 135 கோடி, 95 கோடி, 50 கோடி என்று அள்ளிக் கொடுக்கும் டெல்லி ஏன் இந்த நெய்வேலி திட்டத்திற்கு இந்த 60 கோடி ரூபாயை வழங்கக் கூடாது.

ஏற்கனவே பல துறைகளில் மாற்று மனப்பான்மை காட்டி வந்தாலும் இந்த ஒரே ஒரு திட்டத்திலாகிலும் முழுக் கவனம் செலுத்தி ஆவன செய்யப்படலாகாதா? வேலையில்லாத் திண்டாட்டம், பற்றுக்குறை, குறைந்த ஊதியம் குறைந்த நாள்களே வேலை" போன்ற குறைகளெல்லாம் இங்குத் தானே அதிகரித்துக் கொண்டிருக்கிறது! பின்னர் ஏன் தக்கவாறு கடமையாற்றவில்லை?

கவனிக்கவில்லை என்றால் டெல்லி நம்மை வாழவிடாமல் செய்கிறது, என்றுதானே அர்த்தம்! ஏராளமான பணத்தை நம்மிடமிருந்து கொண்டு சென்று, தான் செழிப்புறத்தானே நினைக்கிறது டில்லி!

வடவருக்கு! 'பிளேட்' நிறைய பண்டங்களை வைத்து அவனைக் கொழுக்க வைக்கிறது டில்லி! நம்மிடமோ நாம் மெலிந்திருந்தும் காலி தட்டையும் கரண்டியையும் நீட்டுகிறது. நமக்கு இல்லாதபடி நமது கறவை மாட்டின் பால் பூராவையும் கறந்து கொண்டு போகிறது டில்லி! நாம் மாட்டிற்கென்று ஏதாவது துளி கேட்டால் கொடுக்க மறுக்கிறது! எவ்வளவு தைரியம் அதற்கு!

நிலைமை இவ்வாறிருக்க அமைச்சர் அளகேசனரோ அது தப்பு! அப்படிக் கேட்பது சரியல்ல! எங்கு நடந்தாலும் நமக்குத்தான் என்ற மனப்பான்மையை வளர்க்க வேண்டும் என்று கூறுகிறார்! மந்திரி பதவி, என்னும் 'லாகிரி' செய்யும் வேலைதானே இதற்கெல்லாம் காரணம்!

அங்கே இருக்கிறது. இங்கே இல்லை எனவே இங்கு உண்டாக்குவது என்றால் அங்கு இருப்பதே நமக்குப் போன்றதென்ற மனம் வேண்டும் என்கிறார் மந்திரி! என்ன பேதமை இது! அமைச்சர் வற்புறுத்துகிறாரே அந்த வளர்க்க விரும்பும் மனப்பான்மையால் யார் வளர்த்து விடபபட்டிருக்கிறார்கள் தெரியுமா! வடவர்தான்.

அதோபார் பெரிய தொழிற்சாலையை வடக்கே என்று பெருமிதம் கொள்கிறான் வடவன், இங்கோ மந்திரி கருத்தபடி அது நமக்குத்தான் என்று நினைக்கும் மனப்போக்கு! அதோ அதிசய அணைக்கட்டு! 'பாருங்கள் எனச் சந்தோஷம் மிக காண்பிக்கிறான் வடவன்! இங்கோ அதுவும் நமக்குத்தான் என்ற மனப்போக்கு, அந்த மனப் போக்கு இங்கே! அங்கோ உயர்ந்த திட்டங்கள்!

அதிசய அணைக்கட்டு என்று கூறி

8-ம் பக்கம்

மதமா-மதியா?

'அதட்டினுன்!

அடித்தான்! என்றாலும் பாதம் தாங்கி வால்பிடித்தே திருவோம்.

பழித்தான்!

பகடி பண்ணினுன்! பரவாயில்லை. பக்கத்தில் நின்று பன்னீர் தெளிப்போம்.

பிள்ளையை உதைத்தான்!

தந்தையைத் தாக்கினுன்!!

தாயைத் தரையில் தள்ளினுன்!!!

தொட்டுக்கட்டிய மனைவியைக் குத்தித் தள்ளினுன்!

பாதகமில்லை, பின் தொடர்வோம். நிழல் நிஜத்தைத் தொடர்வதுபோல—தாய் சேயை நாடுவதுபோல.

பூலோக புண்ணியனே! மறுலோகத்தில் மனுப்பேசுகிறவனே! மயான குழியில் மண்டையைப் போடுவது வரை நாங்கள் உம்மையே நாடுவோம்—தேடுவோம்—'ஆவே' பாடுவோம்...இன்னும் என்னென்னலாமோ செய்வோம்'

*

இப்படி அவர்கள் கூறுவது போலிருக்கிறது இன்றைய வடவை மக்கள் நிலை. வீரம் உலவிய ஊரில்—விவேகம் வேரூன்றிய பதியில்—இன்று அவை ஓய்ந்து, தேய்ந்து தெருப்புழுதியாகி வருகின்றன. மானத்திற்காக நீதிமன்றம் சென்று போராடி வெற்றி கண்ட மக்கள் இன்று அத்தனையும் மறந்து மாற்ருனின் முன்பு மண்டியிட்டு வருகின்றனர். வெட்கம்! வேதனை கலந்த வெட்கம்!! வடவையனே கேள்! நீ வாழ்க்கைத் துணைவியாக வரித்தவளை—உன்கரமன்றி மாற்ருன் காற்றுகூட பட நீ சம்மதிக்காதவளை அவன் தொட்டிழுத்துத் தூக்கி எறிந்தால் கோழைகூட பாய்வானே! மூடவன் கூட முண்டாசு கட்டுவானே. ஆனல் நீயோ திருகிய மீசையை தொங்குமீசையாக்கி—கைகட்டி வாய் புதைத்து, உள்ளம் பதைத்து—இடையில் கட்டி—முட்டங்கால் போட்டு—முடி மண்ணில்பட மண்டியிட்டு துதி பாடுகிருயே! சொல்லக் கூட நாகூசுகிறது! தொடை நடுங்கிக் கூட செய்யத் துணியாத செயல்! இத்தனையும் செய்ய வைத்துவிட்டது உனது மதம்! வீரத்தை விலை கூறி விட்டது வேதாந்தம்! விவேகத்தை விதவையாக்கி விட்டது—விலையம், மானத்தை முண்டமாக்கி—உரிமையை உதாசீனம் செய்து—பகுத்தறிவிற்கு படுதாயிட்டு—நடமாடும் கேள்விக்குறியாக்கி விட்டதே. எந்த அநீதிக்காக மதத்தை எதிர்த்தாயோ அதை மறந்தாய். இல்லை; மதம் மறக்க வைத்து விட்டது, எந்த உரிமைக்காக வாதாடினுயோ அதற்கு 'லீபெரா' பாடிவிட்டாய், கடவுள் என்ற கற்பனைச் சொல்லுக்குப் பயந்து.

பிதாவைக் காட்டி பணவாழ்வு நடத்துகிறது ஒருகட்சி! நீயோ அதை நம்பி பிணவாழ்வு நடத்துகிருய். அதனைக் காட்டி சுக வாழ்வு நடத்துகிறது சுயநலக் கட்சி! நீயோ சுரண்டப்பட்டு வரண்ட வாழ்வு நடத்துகிருய். இஸ்பிரீத்துசாந்துவைக் காட்டி இன்பவாழ்வு வாழ்கிறது ஷெ கட்சி! நீயோ அதற்கு இருப்பதையும் இறைத்துவிட்டு இல்லாதவஞக அல்லல்படுகிருய்.

இதனை எத்தனையோ முறை எடுத்துக் கூறினேம்—எல்லாம் ஏமாற்றுத்தனம் 'புனிதச்'சுரண்டல் என்று விளம்பரங்கள் மூலம் வேண்டினேம். அறிக்கைகள் விடுத்தோம். நாடகங்கள் வாயிலாக இந்த நல்ல பணியைச் செய்தோம். முதல் வெற்றி யடைந்தோம். முழுவெற்றி யடையவில்லையே! ஆனலும் கூறுகிறோம் முற்றிலும் வெற்றி யடையாது விடுவதுமில்லை.

வடவையே! நீ தொடுத்த போர் முடிந்ததா? இல்லையே! இடையிலேயே வாளை உறைவிட்டு விட்டாயே! நீ தொடங்கிய பயணம் முடிந்து விட்டதா? இல்லையே! இடுப்பில் கை கொடுத்து விட்டாயே! உன் இலட்சியத்தை அலட்சியம் செய்து விட்டாயே! சந்தனக் காட்டிலே புகுந்த நீ

எது வேண்டும்?

சருகு பொறுக்க எண்ணலாமா? புலிவேட்டையை எண்ணலாமா! வெற்றிக் கொடி பிடிக்க வேண்டிய நீ காவிக் கொடி பிடிக்கக் கருதலாமா ?

அன்று நீ எடுத்த உறுதியை—அதற்காக நீ கொட்டிய வேர்வையை—சிந்திய ரத்தத்தை—சிறையில் கழித்த காலத்தை—விதைத்த வெள்ளித் தோட்டாக்களை ஒரு முறை திரும்பிப்பார்! எடுத்தகாரியத்தை, பெற்றதாய் தடுத்திடினும் நிறுத்தேன் என்றல்லவா அன்று குரல் கொடுத்தாய். உரைத்த குழியை ஒன்றில் முடிப்பேன் இன்றேல் மடிவேன் என்றல்லவா ஆர்த்தெழுந்தாய், இன்று எதிரியின் கைப்பாவையாய் மாறுகிருயே, பின்னேடி வரும் பிள்ளையாய், கவளச்சோற்றைக் கண்ட காகமாய், வருகிருயே! அந்தோ!

வடவைத் தாயே! சிங்கக்குரல் கொடுத்து சுதந்திரமாய் வாழ்ந்த உனக்கேன் இன்று இந்தப் புத்தி! சிங்காரச் சிட்டாக சிறகடித்து வந்த உனக்கு விட்டில் பூச்சியாக உருமாற உள்ளம் இசைந்ததா? கொள்கை வைரம் பாய்ந்த உனக்கு பச்சோந்தியாய் நிறமாற உறுதி வந்ததா? தியாகத்தீயில் புடம் போட்டு எடுக்கப்பட்ட தங்கம் நீ, உன்னைத் தகரத்தகடாக்க விரும்பலாமா? ஏறு நடை போட்டு சீறும் சிங்கமென உலவிய உனக்கு புதைந்து வாழும் புழுவாய், புன்மைத் தேரையாய் பொழுது போக்க புத்தி வந்ததா? உன்னைக்காணுந்தோறும் ஆனந்தக் கண்ணீர் வடித்தோரை இப்போது ரத்தக்கண்ணீர் வடிக்க வைத்து விட்டாயே! "வடவையான் என்றும் வாகையுடையான்' என்றும் வாயாரப்போற்றியோரை........" என்றும் பகையுடையான் " என்று தூற்ற வைத்து விட்டாயே!

இவை யெல்லாம் வேதம் என்ற பேரால் செய்த சதி! மதம் ஊட்டிய போதை! புத்தியைப் புதைத்தப் பக்தி! என்ற உண்மையை உணரும் போது இனியும் உனக்கு ஒரு மதம் தேவைதானு

வடவைக்குரல்

என்று கேட்கத் தோன்றுகிறது. அன்று உனக்கென ஒரு மதமும், ஒரு கடவுளும் உண்டு. இன்று ஆளுக்கொரு கடவுள், வீட்டிற்கொரு மதம் என்ருகி விட்டது. அன்று ஊருக்கு ஒரு கோயில் இன்று ஜாதிக்கு ஒரு கோயில் என்ருகிவிட்டது, வாய்க்கு வந்ததெல்லாம் வேதவாக்கு 'ஏன்?' என்ற வினவுக்கு விடை தெரியாததற்கெல்லாம் 'தேவரகசியம்' அதற்கு ஆமாம் போட சில ஆசாமிகள்! ஐயோ! வடவையே! உன் நிலை இப்படியா மாறவேண்டும். சிந்தனைக்கு இடம் கொடுத்த நீ சிரிப்பிற்கு இடம் வைக்கலாமா? விவேகத்துக்கு வாழ்த்துப் பாடிய நீ இன்று வைதீகத்திற்கு வரவேற்பு வாசிக்கலாமா?

காலையில் வா கடவுளைக் காட்டுகிறேன்.

மாலையில் மாதாவை தரிசிக்கலாம்.

சனிக்கிழமை வா. பாவத்தைப் போக்குகிறேன்" என்றும்,

நெற்றியில் நாமம் போட்டால் நேரே மோட்சம்; பழனிக்கு வந்து மொட்டையடித்தால் பரலோகம் கிட்டும்" என்றும்; சென்றவர் திரும்பாத வைக்குண்டத்திற்கு ஆள் திரட்டப் புறப்பட்டு விட்டார்கள். ஒரு முகாமிலிருந்து மட்டுமல்ல, இரு முகாம்களிலிருந்து.

ஆம்; தாமரைத் தடாகத்தை எருமை அழிப்பது போல்; பூந்தோட்டத்தை புயல்காற்று சிதைப்பதுபோல் சில "பாத்தர் நோஸ் தேக்கள்" பண்டார சந்நதிகள் வடவையில் புகுந்து மக்கள் உள்ளத்தில் மாசு தூவி வருகிருர்கள்—வளர்க்கிருர்கள். உண்மைக் கடவுள் இருந்து, வடவை வீதிகளிலே இன்று வருவாரேயானல் சந்து வேறு, சதை வேருக்கித் தன்னை பங்கு போட்டுவிட்டார்களே என்று பதை பதைத்து இந்த ஊரே வேண்டாமென்றே கண்ணீரும் கம்பலையுமாய் கம்பி நீட்டி யிருப்பார் — திரும்பிக் கூட பார்க்கமாட்டார் இது உண்மை.

வளமார் வடவையே! உன் உதிரத்தை வெவ்வேறு மதக்குழாய் வைத்து உறிய ஆரம்பித்துவிட்டார்கள். அயர்ந்தவன் தூங்க ஆரம்பித்தவன் தட்டிக் கொண்டு போகத் தயாராகி விட்டான்.

இத்தகைய வேலை பார்த்து அக்காலத்தில் திணிக்கப்பட்டது தான் 'ஆகஸ்டு அம்மையார்' திருநாள்! உன்னைச் சுரண்டிச்செல்ல தேர்ந்தெடுக்கப்பட்ட பொருத்தமான நாள்! மறந்திருக்கமாட்டாய் ஆண்டவன் பெயரைச் சொல்லி கொண்டே மக்களின் மண்டையில் தடியால் அடித்தார்களே அந்த நாள்! கர்த்தரின் திருநாமத்தால் கண்ணீர் புகை போட்டு கண்ணீர் உகுக்க வைத்த 'கண்ணிய நாள்!' ஆகஸ்டு ஆரும்நாள்! அதோ அண்மையில் வருகிறது! அதை ஒருமுறை எண்ணிப்பார்! அன்று நீ வடித்த கண்ணீரை—கொட்டிய குருதிச் சொட்டுகளை—உரிமைக் கிளர்ச்சியை—நேர்மைப் போரை, அவை அத்தனையும் உன் தியாகத்தை நினைவூட்டும். அந்நாள் உனக்கு வேண்டாம் என்பதை அறிவூட்டும். ஆகவே இனியும் இளிச்சவாயஞய் இராதே! எச்சரிக்கையாயிரு என்ருற்போல் சிகப்பு நிறத்தில் காலண்டரில் தோன்றுகிறது பார்!

ஆகவே மதம் மதம் என்று மண்டையை உடைத்ததுபோதும் சண்டை விடுத்து, மடமை தவிர்த்து மனிதர்களாக வாழக் கற்றுக் கொள். பழமை எண்ணம் ஒழித்து புதுமை கருத்துக் கொள். இது வேதாந்த காலமல்ல. மதியின் காலம். ஆகவே கண்மூடித்தனமாய் நம்புவதை விட்டு சிந்திக்கப் புறப்படு. மறுலோக வாழ்விற்குமனக்கோட்டை கட்டுவதைவிட இகலோகத்தில் ஒழுக்கமுடன் வாழக் கற்றுக் கொள். அப்போதுதான் உயிரினும் உயரியதாக எண்ணி கட்டிய பள்ளியை உன்தன்மான சின்னத்தை—வெற்றியின் அறிகுறியை—ஆம்; அந்த நேரு உயர்தரப் பள்ளி காப்பாற்ற முடியும் வடவையில் 'மதவாதி சிரம் குனிந்தது—மக்கள் கரம் ஓங்கியது; 'தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன் மெய்வருந்தக் கூலி தந்தது என்பதின் எடுத்துக் காட்டு அந்தப்பள்ளி! அந்தவெற்றியின் சின்னத்தை கண்ணிமை போல் காத்து உன் கரத்தில் தந்திருக்கிறோம். பாதுகாத்துக் கொள். 'பள்ளியை அழிப்பேன்; செங்கலை உருவுவேன்; ஒருசுவர் இடித்தால்தான் உறக்கம் கொள்வேன்' என்று கங்கணம் கட்டிக் கொண்டோர் எல்லாம், நேரு பள்ளி எங்கள் பள்ளி! பச்சை ரத்தம் பரிமாறியேனும் பள்ளியைக் காப்போம்!' என்று ஒரே குரல் கொடுக்கும் நாள் விரைவில் வந்துதான் ஆகும்.

ஆனல், வேதத்திற்கு வளைந்து

8-ம் பக்கம்

அபாய அறிவிப்பு?

o

தொழில் மயமாக்குவதில் தொடர்ந்து தென்னாடு புறக்கணிக்கப்படுவது ஆபத்தான ஒன்றாகும்;

"மக்கள் தொகை அடிப்படையில், மாநிலங்களுக்கு, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படவேண்டு மென்று சென்னை நிதிமந்திரி தேசிய அபிவிருத்திக் 'கவுன்சில்' கூட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

"இப்படிச் செய்வது நல்லது தான்; ஆனால், கடந்த 50-ஆண்டு காலமாக, தென்னாடு, தொழில் வளர்ச்சி பெறவில்லை அந்தக் காலத்தில் பம்பாயும், வங்கமும் தொழில் துறையில் எவ்வளவோ முன்னேறியுள்ளன; அந்த வட்டாரங்களின் தொழில் வளர்ச்சிக்குச் சமமானதாக, தென்னாட்டில் தொழில் வளர, சர்க்கார் என்ன செய்யப் போகிறார்கள்?

" எனவே, மக்கள் தொகையை அடிப்படையாக வைத்து இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாட்டிற்கு நிதி ஒதுக்குவது மட்டுமன்றி, தென்னாட்டிற்கு உபரி பங்கு தரப்பட வேண்டும். தென்னாட்டவர் இதனைக் கோருவது நியாயமானதேயாகும்.

"தென்னாட்டிற்கு உருவானது ஏதாகிலும் செய்ய வேண்டிய காலம் நெருங்கிவிட்டது. இல்லாவிட்டால், இன்னும் தென்னாடு தொழில் துறையில் புறக்கணிக்கப்படுவது. ஆபத்தான ஒரு காரியமாகவே இருக்கும்; ஏனெனில், தென்னாட்டில்தான் ஏராளமான அளவு படித்தவர்கள் வேலை யற்றிருக்கின்றனர்."

—என்று பிரபல தொழிலதிபரான எஸ். அனந்தராம கிருஷ்ணன் 31—7—55-ம் நாளன்று சென்னை எஞ்சினீயர்கள் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

வண்ணை கே. எஸ் பாண்டியன் படிப்பகம்

5—8—55 மாலை 6-மணிக்கு, வண்ணை கே. எஸ். பாண்டியன் படிப்பக பணிமனையில், தோழர் மோகன் தலைமையில், 'நமது குறிக்கோள்' என்ற பொருள் பற்றி படிப்பக உறுப்பினர்கள் பேசுவர்.

அந்த மனப்பான்மை!...தொடர்ச்சி

யதை கண்டு தோழர்கள் அழுக்காக என்று நினைக்க வேண்டாம். உண்மையில் அதிசய அணைக்கட்டு என்று பாருக்கெல்லாம் பரவசம் பொங்கக் காட்டுகிறார்கள். அதோ அந்தப் பெருமிதம் கனம் மர மந்திரி முன்ஷி அவர்களால் கூடக் கொண்டாட முடிகிறது, பாருங்கள். அதிகம் வேண்டாம் அவர் வடநாட்டு பத்திரிகை ஒன்றில் (The Wonderful Dam) என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையின் சாரத்தைப் படியுங்கள் விளங்கிவிடும்.

'பக்ரா நங்கல் அணைக்கட்டைப் பற்றி என்னால் விஸ்தரிக்க இயலாது. அது பிரம்மாண்டமான திட்டமாகும். கிழக்குப் பஞ்சாபிற்குச் சென்று நாம் கண்ணால் காணவேண்டிய ஒரு அரிய காட்சியாகும் அது. இந்த அணைக்கட்டு உங்கள் கல்வி அறிவு பூர்த்தியாவதற்கு நீங்கள் இதை அவசியம் பார்த்தாக வேண்டும் என்றும் உறுதியாய்க் கூறுவேன்.

இந்த அணைக்கட்டு கட்டுவதற்கு ரூ. 159கோடிபிடிக்கும். 1 லட்சத்து அறுபதாயிரம் ஆட்கள் வரையிலும் ஒரே சமயத்தில் இதற்காக பல தினங்கள் வேலை செய்ததுண்டு. இதன் உயரம் 680 அடி.

உலகிலுள்ள இரண்டாவது மிகப் பெரிய அணைக்கட்டாகும் இது. நீர்ப்பாசன வசதியை அளிக்கும் சக்தியில் உலகிலேயே இதுதான் பெரியது! ஒரு கோடி ஏக்ரா நிலங்களுக்கு இந்த அணைக்கட்டு மூலம் நீர்ப்பாசனம் செய்யலாம் இருபது லட்சம் டன் உணவுப் பொருள்கள் இந்த அணைக்கட்டு மூலம் மக்களுக்குக் கிட்டும்.

பிரம்மாண்டமான அணைக்கட்டுகளுக்குப் பேர்போன ருஷ்யாவில்கூட பக்ரா அணைக்கட்டுமூலம் கிடைக்கக் கூடிய அளவு மின்சார வசதி இல்லையென்று கூறுவது மிகையாகாது. இந்த அணைக்கட்டுக்கு வேண்டிய நுணுக்க வேலைகளெல்லாம் இந்திய நிபுணர்களாலேயே கவனிக்கப்பட்டு வருகிறது. 41 அயல் நாட்டு நிபுணர்களும் சேவை செய்துள்ளார்கள்!

இவ்வளவு அதிசயிக்கத் தக்க பிரம்மாண்டமான அணைக்கட்டைப் பற்றி பாரத மக்கள் பெரிதும் பெருமை கொள்ளலாம், பக்ராநங்கலில் அநேக விசித்திரங்களைக் காணலாம். அங்கே ராக்ஷச யந்திரங்கள் ராக்ஷச சாதனைகளை விட வியக்கத்தக்க அற்புதவேலைகள் செய்வதைக் காணலாம்.

மலையை நொடிப்பொழுதில் பெயர்த்தெடுப்பதையும் காண்பீர்கள் பள்ளத்தாக்குகளும் மேடாகும் அதிசயத்தை பார்க்கலாம். மனிதனின் கட்டளைக்கிணங்கி நதிகள் எந்தப் பக்கம் வேண்டுமானாலும் பிரவாகம் எடுத்தோடும் காட்சி பிரமாதம்.

நீங்கள் பூமிக்கடியில் கட்டப்பட்ட ஒரு அறையில் நின்று கொண்டிருந்தால் தலைக்கு மீது ஒரு பிரம்மாண்டமான நதியின் பிரவாக சப்தத்தைக் கேட்கலாம்.

இதையெல்லாம் காணும்பொழுது நாம் நாட்டு சாதனைகளையெல்லாம் நன்கு உணராதவர்களே நம் பாரத மக்கள் என்று நான் வருத்தப்படுகிறேன்! மக்களனைவருக்கும் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ந்த இதுபோன்ற பிரம்மாண்டமான சாதனைகளைக் கண்டு மகிழ்வதற்குச் சர்க்கார் சந்தர்ப்பமளிக்க வேண்டும்! அப்பொழுதுதான் நம்நாட்டார்கள் புரிந்துள்ள அரிய பெரிய சாதனைகளைப் பற்றிப் பெருமிதம் தோன்றும்!

வெளிநாட்டிற்குச் செல்லும் நம் தேசப் பிரதிநிதிகள் இங்கு திரும்பி வரும்போது அங்கு கண்ட அரிய சாதனைகளைப்பற்றி ஓயாமல் புகழ்கிறார்கள்!

இம்மாதிரி பிரதிநிதிகளுக்கு நம் சர்க்கார் போதிய மட்டில பயிற்சி அளிக்கவில்லை என்றே கருத வேண்டியதிருக்கிறது! ஆறு மாத காலத்திற்காவது இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்ட சாதனைகளையும் மற்ற வியக்கத்தக்க அதிசயங்களையும் காண வசதிகள் பெற்ற பிறகே இந்தியர்கள் அதிலும் இந்திய பிரதிநிதித்வ கோஷ்டிகளின் அங்கத்தினர்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்...'

ஒரேயடியாகப் பெருமையின் உச்சாணிக் கொம்பில் நின்று அதோ பேசுகிறார் கே. எம். முன்ஷி! பேரானந்தம் கொள்கிறார் அதிசய அணைக்கட்டு அது என்று.

41 வெளிநாட்டு நிபுணர்கள்.

159 கோடி ரூபாய்ச் செலவு.

680 அடி உயரம்.

லட்சத்து அறுபத்தேழாயிரம் ஆட்களுக்கு வேலை.

உலகில் பெரியதில் இரண்டாவது—பக்ரா நங்கல்,

நீர்ப்பாசன வசதியில் உலகில், இதே பெரிது.

ருஷ்யாவின் பெரிய அணைக்கட்டில் கிடைப்பதைவிட அதிகமான மின்சாரம் கிடைக்கிறது.

வியக்கத்தக்க ராக்ஷஸ யந்திரங்கள்

கம்பீரத் தோற்றம்.

கண்ணால் காண வேண்டிய அரிய காட்சி.

நீள் சிறப்பினைப் படம் பிடித்துக் காட்டுகிறார் முன்ஷி, புளகாங்கிதம் அதைச் சொல்ல! ஒரே ஒரு பக்ரா நங்கலைப்பற்றி இத்தனை அதிசயிக்கத்தக்க செய்திகளைத் தருகிறார் முன்ஷி. இன்னும் இதுபோல் எத்தனையோ பிரம்மாண்டமான திட்டங்கள் முடிந்தும், வேலைநடந்தும் கொண்டும் இருக்கிறது.

காணவேண்டிய காட்சி! சர்க்கார் இதற்கு வழி வகுக்க வேண்டும் என்று கூறுகிறார் முன்ஷி சந்தோஷத்தினூடே.

மதமா—மதியா ?......தொடர்ச்சி

கொடுத்தால் இதையும் இழந்து ஏளனத்திற்கு இலக்காகி கண்ணீர் சொரிவாய் என்பதை மறவாதே! மதவெறிக்கு மண்டியிட்டால் :

"ரோமை வதைத்தது — வடவை பதைத்தது; தூத்துக்குடி துடித்திற்று — வடவை துடைத்திற்று; குருகுலம் குட்டிற்று—மனுக்குலம் குனிந்திற்று ஏன்? அருள் நெறிக் குழாம் அடித்திற்று. அன்பர் குழாம் தடவிற்று என்றுதானிருக்கும் என்பதை இறுதி முறையாக நினைவூட்டுகிறோம். மதத்தால் அழிந்த நாடுகள், முடிசரிந்த மன்னர்கள் வரலாற்றிலே பலப்பல. அந்தத் துக்க ஏட்டிலே நீயும் ஒரு அத்தியாயமாகி விடாதே யென்று வடவை அன்னையே! உன்னை வினயமாக வேண்டுகிறோம், ஆகவே, மதமூடியை கிழித்துவா! சேற்றிலே ஒருகாலும் மலத்திலே மறுகாலும் வைக்காதே! இரண்டையும் எடுத்துத் துடைத்து அதோ பச்சைப் பசேலென்று தோன்றும் பகுத்தறிவு பாதையில் வை. அப்போது கல்லிலும், கம்பிலும், சாணி உருண்டையிலும், அப்பத்துண்டிலும் ஆண்டவனிருக்கிறார் என்பது பொய்யென அறிவாய். அறிவே ஆண்டவன் ! அன்பே அவன் வழி ! இது மெய்—மெய்—மெய்யென உணர்வாய்!

மதம் வேண்டுமா? அல்லது மதி வேண்டுமா? எது வேண்டும் சொல்!

மதமென்றால் ஆவாய் காடு!
மதியென்றால் ஆவாய் நாடு!
மதமென்றால் விழியுடன் ஓடு!
மதியென்றால் விதியைச் சாடு!
மதமென்றால் கிடைக்கும் சூடு!
மதியென்றால் வாகைச் சூடு!

★

ஆனால் தென்னாட்டில்! ஒரு திட்டமாவது இவ்வளவு சிறப்பானதாக உள்ளதா? அறுபது கோடித் திட்டம் அரோகரவாக அன்றே ஆகிவிடும் நிலையிலிருக்கிறது இங்கு!

வடவரின் அந்த மனப்பான்மை வளர்ச்சியுறும் திட்டத்திற் கடிகோலுகிறது.

நமது மந்திரிமார் கூறும் அந்த மனப்பான்மை நம்மை எங்கு கொண்டு போய் நிறுத்தும்! மன்னும் இமயமலை எங்கள் மலையே! மாநிலத்தில் அது போல் பிறிதொன்றும் இல்லையே என்று புகழ்கிறார்கள்! ஆனால் இமயமலை நமக்கில்லை.

மருமகள் கோகிலா தொடர்ச்சி

குந்தான், வேதகிரி படுக்கை இருப்புக் கொள்ளாமல் எழுந்தபோது வாசற் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது! அவர் உள்ளம் மகிழ்ந்தது ஏதோ ஓர் அசட்டுப் பிடிவாதத்தின் காரணமாக வெளியே சென்ற மகன் மனந்திருந்தி வந்து விட்டானென்று கருதி கதவைத்திறந்தார். கோகிலா நின்று கொண்டிருந்தாள் !

"மாமா! நான் தான் உங்கள் மருமகள் கோகிலா! உங்கள் வீட்டுக்கு விளக்கு ஏற்றிவைக்க வந்திருக்கிறேன்!"

வேதகிரிக்கு ஒன்றும் புரியவில்லை அவள் கோலத்தைக் கண்டு நடுங்கிவிட்டார்.

மாமா நானும் உங்கள் மகனும் காதலித்தோம் நீங்கள் எங்கள் காதலை ஆதரிக்கவில்லை. என் படுபாதக அண்ணனும் சம்மதிக்கவில்லை.........பதிவுத திருமணம் செய்து கொள்ள இரண்டு வாரங்களுக்கு முன்னரே பெயர் பதிவு செய்துக் கொண்டோம். முடிவில் மாமா! என் அண்ணனும் என்னை கற்பைச் சூறையாடத் திட்டமிட்டுக் கொண்டிருந்த பரமசிவனும் ஓர் முரடனோடு வந்து எங்கள் இருவரையும் வழிமறித்துக் கொண்டார்கள்.

"நாகேந்திரன் பதறினா ...!—வேதகிரி."

"நான் முரடனின் கத்தியைப் பிடுங்கி பரமசிவத்தைக் கொன்று விட்டேன்; தடுக்க வந்த என் அண்ணனையும் பழிதீர்த்துக் கொண்டேன்;...... அந்த முரடன் ஓடி விட்டான்"-துண்டு துண்டாக வார்த்தைகளை வெட்டிச் சொன்னாள் அவள்.

"நாகேந்திரன்"— இரண்டாவது தடவையாகப் பதறினார் — வேதகிரி.

"அவரை அந்தப் பாவிகள் சாகடித்து விட்டார்கள்!"

"அய்யோ!" என்று கதறினார் வேதகிரி.

"ஏன் மாமா கதறல்! உங்களுக்கு குலகவுரவம். அந்தஸ்து பணம்—இவைகள் தானே?"

"கோகிலா! கோகிலா! எங்கே என் நாகேந்திரன், உண்மையாகவா கோகிலா?" — அலறினார், வேதகிரி

திடீரென்று கோகிலா மறைத்து வைத்திருந்த ஓர் கத்தியை வெளியில் எடுத்தாள். அதைக்கண்டு மேலும் பதறிய வேதகிரி அதைப் பிடிப்பதற்குள் அவள் கரத்திலிருந்த கத்தி அவள் அடிவயிற்றைப் பதம் பார்த்து சிரித்தது! வேதகிரியின் கதறல் மூன்றாவது தடவையாக அந்தக்கொடும் காரிருளில் கலந்து ஒடுங்கியது!

"சோ"

மழையடித்துக் கொண்டுதானிருந்தது; சுழல் காற்றும் வீசிக் கொண்டுதானிருந்தது — ஆனால் வேதகிரியின் இருதயத்தில் பொங்கிச் சிதறிக் கொப்பளித்துக் கொண்டிருந்த எண்ணங்களின் சூடு மட்டும் தணியவில்லை—இனி தணியாது!

ஆரம்பக் கல்வி சீர்திருத்தம்

திராவிட நாட்டுக் கல்வி வரலாறு

திராவிடப்பித்தன்

24

மெக்காலே கூறிய கூற்றுக்களையெல்லாம் பல அறிஞர்கள் அலசி ஆராய்ந்து பார்த்துள்ளனர். தமது கருத்துக்களையும் கூறியுள்ளனர். மெக்காலேயின் கருத்து கூறப்படுதற்கு முன்னரே இங்கிலாந்து பார்லிமெண்டில் ஒரு அங்கத்தினர் **'ஆங்கிலக் கல்வி முறையை இந்தியாவில் புகுத்தி இந்தியக் காலனியையும் இழந்து விடுவதற்கானவழி கேலாதீர்கள்'** என்று எச்சரிகை விடுத்தார் என்பதை முன்னரே கூறியுள்ளோம்.

கேட்ட மெக்காலே அவசரப்பட்டு தமது முடிவைக் கூறிவிட்டார், இது தான் அவர் செய்த காரியம். இப்படி அவசரப்பட்டு முடிவு கூறியதை மெக்காலே காலங் கடத்திச் சென்றிருந்தாலும் கூட அரபு சமஸ்கிருத கல்வி முறையை ஆதரித்து முடிவு ஏற்பட்டிருக்காது.' இப்படியாக மெக்காலேயின் முடிவின் மீது தமது கருத்தை எழுதியுள்ளார்கள் சையத்நூருல்லா ஜெ. பி. நாயக் இருவரும் தமது **'இந்தியக் கல்வி சரித்திரம்'** எனும் ஆங்கில நூலின்கண்.

இதே விஷயத்தைக் குறித்து திரு

மெக்காலே வருவதற்கு முன்னரே ஆங்கிலக் கல்விமுறை வளர்வதற்கான நிலம் பண்படுத்தப்பட்டு விதையும் விதைக்கப்பட்டிருந்தது. பின்னர் வந்த மெக்காலே பயிர் நன்றாக வளர்ந்து நல்ல பயன் கொடுப்பதற்கான உரம் இட்டார்; அவ்வளவுதான்'

'நாட்டுப் பண்பின் வளர்ச்சியைத் தடைசெய்து கொண்டிருந்த சாதிக்கட்டுப்பாடுகள், குறுகிய மனப்பான்மை மத வைதீகம் ஆகியவைகளெல்லாம் விரட்டியடிக்கப்பட்டன, புதிய நாகரீகம் மலர ஏது செய்யப்பட்டது. ஆங்கிலக் கல்வி கற்று நிறத்திலும் இரத்தத்

வருங்கால முணர்ந்து பணியாற்றிய மெக்காலே

ஆங்கிலேயர்களில் சிலர் இப்படிப்பட்ட அரசியல் கண் கொண்டு பார்த்துக் கண்டித்தனர். இந்தியர்களில் சிலரோ பழைய மௌடிகத்தனத்திலேயே மூழ்கிக் கிடக்கின்றோம் எனக் கூறி ஆங்கிலக் கல்வி முறையை வெறுத்தனர்! ஆனாலும் ஆங்கிலேயர்களில் பலரும் இந்தியர்களில் பெரும்பாலரும் மக்களின் அறிவும் கல்வியும் ஆங்கிலக் கல்வி முறையினால்தான் வளரமுடியும் என ஆங்கிலக் கல்வி முறையை வரவேற்றனர், இவ்வுண்மைகளையெல்லாம் மனதில் கொண்டு மெக்காலேயின் தீர்ப்பை சிந்தித்துப் பார்ப்பதே நேர்மையாகும்.

எஸ். என். முகர்ஜி என்பார் தமது **'நவீன இந்தியக் கல்வி சரித்திரம்'** என்ற ஆங்கில நூலில் கூறுவதும் குறிப்பிடத் தக்கதாகும்.

'புதிய கல்வித் திட்டம் ஏற்பட்டதற்கு—அதாவது மேல்நாட்டு ஆங்கில மொழி மூலம் கல்வி போதிக்கும் திட்டம் ஏற்பட்டதற்கு—மெக்காலேதான் காரணம் என்று குற்றம் சாட்டுவது தவறேயாகும். **இந்த புதிய திட்டத்தின் கர்த்தா மெக்காலே அல்ல** என்பதை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும், கல்விமுறையை மேல்நாட்டு மயமாக்க வேண்டும் என **ராஜாராம்**

திலும் இந்தியர்களாகவும், மற்ற நடை உடை, பாவனை, எண்ணம், செயல் அறிவு ஆகியவைகளில் ஆங்கிலேயர்களாகவும் காட்சி யளிப்பதையே விரும்பினர் பெரும்பாலோர். பல நூற்றாண்டுகளாக அறியாமையில் மூழ்கி அவதிப்பட்டுக் கிடந்த நாட்டில் பண்பாடு புத்தொளி வீசத் தொடங்கியது. பொதுமக்களின் இம் மனமாற்றத்தையும் விருப்பத்தையும் யாராலும் கட்டுப்படுத்த முயலுமா!'

திரு முகர்ஜியின் இக்கருத்து **ஆங்கிலக் கல்விமுறை மக்களின் விருப்பத்தின் விளைவே** என்பதை சுட்டிக்

ஆண்டு அறிக்கையில் இக்கமிட்டியினர் கூறியுள்ளது மெக்காலேயின் எண்ணத்தை நன்கு புலப்படுத்துவதாகும்.

'உள்நாட்டு மொழிகளை வளர்க்க வேண்டிய அவசியத்தையும் அம்மொழிகளை ஆதரிக்க வேண்டிய அவசியத்தையும் நாங்கள் நன்கு உணர்ந்துள்ளோம், கவர்னர் ஜெனரலின் முடிவானது இவ்வேலையைச் செய்வதற்குத் தடையாக இருக்குமென்று நாங்கள் கருதவில்லை, நாங்களும் இதுவிஷயத்தில் கவனம் செலுத்தி காரியமாற்றியுள்ளோம். உள்நாட்டு மொழி இலக்கிய வளர்ச்சிதான கமிட்டியின் குறிக்கோள் என்பதையும் இக்குறிக்கோள் வெற்றி பெறுவதற்கான எல்லா முயற்சிகளையும் கமிட்டி செய்துவரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.'

இத்தகைய கருத்தைக் கொண்டிருந்த மெக்காலேயை நாட்டு மொழி வளர்ச்சியை விரும்பாதவர் எனக் கூறுவது விருப்பத் தகாத செயலாகும். இதுபற்றி திருவாளர்கள் **நூருல்லா, ஜெ. பி. நாயக்** இருவரும் கூறுவது கவனிக்கததக்கதாகும். 'கல்விக் கமிட்டியின் தலைவராயிருந்த மெக்காலேயின் இக்கருத்தை அவருக்குப்பின் வந்த அதிகாரிகள் கவனிக்காது விட்டுவிட்டார்கள். நாட்டு மொழி வளர்ச்சியில் கவனம் செலுத்தாதது அவர்களது தவறேயொழிய மெக்காலேயின் தவறல்ல, மெக்காலேயின் முடிவு வெளிவந்த பின்னருங்கூட பல சமயங்களில் இந்திய உள்நாட்டு மொழிப் பயிற்சியைப் பற்றியும் வளர்ச்சியைப் பற்றியும் அரசாங்க தஸ்தாவேஜிகளில் குறிப்பிடப்பட்டு வந்துள்ளது. அப்படிக் குறிப்பிடப்பட்டு வந்தும் அதிகாரிகள் அதை அசட்டை செய்து வந்தனர். ஆகவே மெக்காலேயை தகுந்த காரணமின்றி குற்றம் சாட்டிப் பேசுவது தவறேயாகும்.

ஆகவே இவற்றிலிருந்தெல்லாம் மெக்காலே உள்நாட்டு மொழிக் கல்வியை விருத்தி யடையச் செய்யும் எண்ணமுடையவராக இருந்தார் என்பதும், உள்நாட்டு மொழிக் கல்வி வளர்ச்சிக்கு

'ஆங்கிலக் கல்வி விருப்பத்தை மெக்காலே சிருஷ்டிக்கவில்லை என்பதை நினைவில் வைகக வேண்டும். ஆங்கிலக் கல்வி விருப்பம் அவர் இந்தியாவிற்கு வருவதற்கு முன்னரே நிலவி வந்தது. ஆங்கிலக் கல்வி விருப்பம் மக்களிடையே ஏற்படுவதற்கான காரணம் அக்கல்வியை கற்பதால் அரசாங்க ஊதியம் அடையலாம் என்ற மக்களின் எண்ணமேயாகும், ஆங்கிலக் கல்வி முறையை ஆதரிக்கும் கோஷ்டி மெக்காலேயால் ஏற்படுத்தப்பட்டதல்ல. இக்கோஷ்டியினர் மெக்காலே இந்தியா வந்தடைவதற்கு முன்னிருந்தே இருந்து வந்தனர். உண்மையைக் கூறினால் ஆங்கிலக் கல்வி வேண்டுமென்ற கோஷ்டியினரும் மெக்காலே இந்தியாவை அடைந்தபோது அதிதீவிரமான யுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர். இந்திய நாட்டு மக்களில் வசதியுள்ளோரும் பணம் படைத்தோரும், மேல்சாதிக்காரர்களும், அரசாங்க உத்தியோகம் விரும்பியோர்களும், அரச குடும்பத்தினரும், நவீன முன்னேற்றத்தில் அக்கரை கொண்டவர்களும், இன்னும் மற்ற வகையினரும் ஆங்கிலக் கல்வியை விரும்பினர். இக்கல்வியை கம்பெனி ஆட்சியினரிடம்பெறஇயலாதுபோகவே கிருஸ்துவப் பாதிரிமார்களின் பள்ளிகளின் உதவி மூலம் நிறைவேற்றிக் கொண்டனர். தாமே முயற்சி செய்து சில ஆங்கில மொழிப் பள்ளிகளை ஏற்படுத்திக் கொண்டனர், புதிய ஆர்வம் மிக்க இளைஞர்கள் சீர்திருத்த மனப்பான்மை காரணமாக ஆங்கிலக் கல்வியைப் பரவச் செய்வதில் தீவிரமாக இருந்தனர். பழமை மோகங் கொண்டவர்களோ வாரன் ஹேஸ்டிங்ஸ் மிண்டோ முதலியவர்களால் கடைப்பிடிக்கப்பட்ட சமஸ்கிருத அரபுமொழிக் கல்வியே நன்மை பயப்பதாகும் எனக் கூறி நவீன முன்னேற்றத்திற்கு தடைக்கற்களாக நின்று வந்தனர். இரு வேறு கருத்துடையோர்களின் வாதங்களையும்



லார்ட் வில்லியம் பென்டிங்க்

லார்ட் மெக்காலே

மோகன்ராய் அவர்களும் அவரது சகாக்களும் விரும்பினர், ஐரோப்பிய கிருஸ்துவப் பாதிரிமார்களும் மேல்நாட்டுக் கல்வியை மக்களிடையே பரவச் செய்து வந்தனர், இப்படியெல்லாம் மக்களால் பெரிதும் விரும்பப்பட்டு

காட்டுவதாகும்,

மெக்காலே அவர்கள் இந்திய உள்நாட்டு மொழிகள் யாவும் வளம் நிறைந்தனவல்ல எனக் கூறினார் என்றாலும், உள்நாட்டு மொழிகளில் கல்வி பயிற்று

எதிராக இருக்கவில்லை என்பதும் தெரிய வரும்.

மேல்நாட்டு அரசியல் எண்ணங்கள் இந்தியர்களிடையே பரவுவதற்குக்கூட மெக்காலேதான் காரணமாயிருந்தார்

ஆங்கிலக் கல்வி ஏற்பட மக்களும் காரணமாவர்

ஆதரிக்கப்பட்டு வந்த விருப்பத்தின் வழியே மெக்காலேயும் சென்றாரே தவிர அவரே தன் துவிருப்பப்படி புதியதொரு கல்வித் திட்டத்தை ஏற்படுத்திவிடவில்லை, ஊருடன் ஒத்துப்போ என்ற பழமொழியை மெக்காலே சரிவரக் கையாண்டார்; வேறொன்றுமில்லை,

விப்பதைக் கண்டித்தவரல்ல. நாட்டு மொழிகள் நன்கு வளம்பெற்று வளர்ச்சியடைய வேண்டும் என்பதே அவரது எண்ணமாகவும் இருந்தது. அவர் தலைவராக இருந்து வந்த வங்கக் கல்விக் கமிட்டியில் பல தடவை இவ்வெண்ணத்தைக் கூறியுள்ளார். 1836-ம்

என்றும்கூறப்படுகின்றது. ஆனால் இது சரியல்ல, மேல்நாட்டு அரசியல் எண்ணங்களை, மெக்காலே வரும் முன்னரே வங்காளிகளும் மற்றப் பகுதியினரும் அடைந்திருந்தனர் அப்படித் தாங்கள் அடைந்திருந்த எண்ணங்களை மேலும் மேலும் வளர்த்து வந்தனர், 1831-ம்

வில்லியம் பென்டிங்க் ஏற்படுத்திய ஆங்கிலக் கல்விமுறை

பிரசன்னகுமார் டாகூர் என்பாரால் துவக்கப்பட்டதும், முதன்முதல் இந்தியர் ஒருவரால் ஆங்கில மொழியில் நடத்தப்பட்டு வந்ததுமான ரிபார்மர் (Reformer) என்ற பத்திரிகை துவக்கத்திலிருந்தே நவீன முன்னேற்றத்தை ஆதரித்து எழுதி வந்தது. இந்தியர்களின் அரசியல் உரிமைகளைப்பற்றி தொடர்ச்சியாக கட்டுரைகளை வெளியிட்டு வந்தது. இந்திய மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய சுயஅரசியல் சபை ஒன்று ஏற்படுத்தும்படி கிளர்ச்சி செய்தது. 1832-ல் ராஜாராம் மோகன்ராய் அவர்கள் 'புதிய சீர்திருத்த மசோதா' நிராகரிக்கப்பட்டால் தாம் இங்கிலாந்தின் தொடர்பிலிருந்து அறவே நீங்கிவிடப் போவதாக அறிவித்தார். மேல் நாட்டு நாகரீகமும் முற்போக்கு எண்ணங்களும் இந்திய நீதிமன்றங்களில் ஜூரி முன் விசாரணை செய்து வருவது, எழுத்துச் சுதந்திரம்—பத்திரிகை சுதந்திரம் அடைந்திருந்தது. மற்ற அரசியல் பேச்சு சுதந்திரம் அடைந்திருந்தது ஆகிய இப்படிப்பட்ட விஷயங்களில் காணக்கிடந்தன. 1838-ல் பிரசன்ன குமார் டாகூர் 'பிரிட்டிஷ் ஆட்சியை இந்தியாவில் பலமாக நிறுவுவதற்கு இங்கிலாந்திலுள்ளதைப் போல இந்தியாவிலும் மக்களுக்கு அரசியல் சுதந்திரம் அளிப்பதுதான் சிறந்த வழியாகும். பிரிட்டிஷார் இந்தியர்களை தங்கள் அடிமைகள் என்று நினைப்பது கூடாது. ஆட்சிபுரிவோர் ஆட்சி புரியப்படுவோர் என்ற வேற்றுமைக் கருத்து இக்காலத்தில் மறைந்து வருவதை பிரிட்டிஷார் உணர்தல் வேண்டும்.' என அறிவுறுத்தினர். இப்படியாக இந்தியர்கள் அரசியல் சுதந்திர நினைவு கொண்டு பல வழிகளில் தமது நாட்டின் முற்போக்கிற்கு காரியமாற்றி வந்தனர் மெக்காலே வருவதற்கு முன்னரே. ஆனாலும் மெக்காலேயின் தீர்ப்பானது இந்தியர்களின் அரசியல் சமுதாய எண்ணத்தை புது உருவில் மாற்றி அமைத்து முடிவில் சுதந்திரம் அடைவதற்கான அடிப்படையாக அமைந்து விட்டது, என்பதை மட்டும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். நிற்க,

மெக்காலேயின் கருத்தானது எதிர் கட்சித் தலைவர்—சமஸ்கிருத அரபு மொழிக் கல்வியை ஆதரித்த கட்சித் தலைவர்—பிரின்சப் அவர்கட்கு அனுப்பப்பட்டு அதன்மீது அவரது கருத்தும் பெறப்பட்டது பிரின்சப் 1813-ம் ஆண்டு கம்பெனியின் புதுச்சட்டம் 43-வது பிரிவைப் பற்றியே மிகுதியும் வற்புறுத்திக் கூறியுள்ளார். இந்தப் பிரிவில் கண்டிருந்த வாசகங்கள் முன்னரே கூறப்பட்டுள்ளது வாசகர்கட்கு நினைவிருக்கலாம் 'கற்றறிந்த இந்திய அறிஞர்களை ஆதரிக்கவும், இலக்கியங்களை வளர்க்கவும் புதுப்பிக்கவும், பிரிட்டிஷ் இந்திய மக்களிடையே நவீன விஞ்ஞான அறிவைப் புகுத்தி வளர்ச்சியடையச் செய்யவும், ஆண்டு தோறும் ஒரு இலட்ச ரூபாய் செலவு செய்ய சட்டப்படி இடமளிக்கப்பட்டது. இந்தப் பிரிவையே பெரிதும் குறியாகக் கொண்டு பிரின்சப் வாதாடினர்.

!சட்டப் பிரிவில் கூறப்பட்டுள்ள இலக்கியங்கள் என்பவை அரபு மொழி இலக்கியங்களும் சமஸ்கிருத மொழி

19-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் கல்வி வளர்ச்சி

இலக்கியங்களுமே யாகும். முன்னமே சமஸ்கிருத அரபு மொழிக் கலாசாலைகள் ஏற்படுத்தப்பட்டு ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டுள்ள இலக்கியங்கள் யாவும் வளர்க்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டு வந்துள்ளன. இவைகளை நவீன அச்சியந்திரம் மூலம் அச்சியற்றி புது புத்தக உருவில் கொண்டுவருவதற்கு ஆகும் செலவிற்காகவே ஒரு லட்சம் ரூபாய் இச்சட்டப் பிரிவினால்தரப்பட்டுள்ளது. அடுத்தபடியாக 'கற்றறிந்த இந்திய அறிஞர்களை ஆதரிக்கவும்' எனக் கூறப்பட்டுள்ளதானது அரபு சமஸ்கிருத மொழியில் வல்லவர்களை அம்மொழி இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபடும்படிச் செய்வதும் அவ்விலக்கியங்களை வளர்ச்சியடையும்படிச் செய்வதும் அம்மொழியில் வல்ல மாணவர்கட்கு பண உதவி புரிந்து ஆதரிப்பது ஆகும். ஆகவே இந்த சட்டப் பிரிவு ஏற்படுத்தப்பட்டதற்குக் காரணமே இந்திய மக்களும் அவர்களது இலக்கியங்களும் ஆதரிக்கப்படுவதற்கே யாகும்,' இதுதான் கீழ்த்திசை மொழி ஆதரவாளர்களின் வாதம்.

பிரின்சப் போன்றோரின் வாதம் வெற்றி பெற்றிருந்தால் அரபு சமஸ்கிருத மொழிக்கல்வி ஏற்பட்டிருக்கும் என்று கூறிவிட முடியாது. ஏனெனில் புது நாகரிகம், புது சீர்திருத்தம், புது வகை வாழ்க்கை ஆகிய வழிகளில் செல்லத் துவங்கிவிட்ட மக்கள் அவர்களது செய்கையை ஆதரிக்கமாட்டார்கள்.

மெக்காலேயின் கருத்தை கவர்னர் ஜெனரல் லார்ட் வில்லியம் பென்டிங் ஏற்றுக்கொண்டு 1835-ம் ஆண்டு மார்ச் மாதம் 7-ந் தேதி தமது முடிவைக் கூறி ஆங்கிலக் கல்வி முறையை இந்தியா முழுவதற்கும் சட்டபூர்வமானதாகச் செய்துவிட்டார். கவர்னர் ஜெனரலின் பிரகடனம் வருமாறு;

1. ஆங்கில இலக்கியத்தையும் ஆங்கில விஞ்ஞான அறிவையும் இந்திய மக்களிடையே வளர்த்து வருவதுதான் கவர்னர் ஜெனரலின் கருத்தாகும். கல்விக்கென ஒதுக்கப்படும் நிதிகள்யாவும் ஆங்கிலக் கல்விக்கே செலவிடப்படும்.

2. ஆனால் உள்நாட்டு மொழிக் கல்வியை அழித்துவிடுவது என்பதல்ல கவர்னர் ஜெனரலின் நோக்கம். இப்போது இருந்துவரும் நாட்டு மொழிக் கல்விக்கூடங்கள் யாவும் (சமஸ்கிருத கல்லூரிகளும், மத்ராசாக்களும்) தொடர்ந்து உதவி பெற்றுவரும்.

(3) அரபு சமஸ்கிருத மொழி நூல்களை அச்சடித்து வெளியிடுவதில் பெருந்தொகை செலவிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இனிமேல் அப்புத்தகங்களை அச்சியற்றி வெளியிடுவதற்கு யாதொரு விதமான தொகையும் செலவிடப்படக்கூடாது.

4 இந்திய மக்களுக்கு இனி ஆங்கில இலக்கிய அறிவை ஆங்கில மொழி மூலமே புகட்டிவரவேண்டும். இதற்கே எல்லா நிதிகளும் பயன்படுத்தப்பட வேண்டும்.

பென்டிங்க் அவர்களின் இந்த உத்தரவு இந்திய நாட்டின் கல்வி முறையையே மாற்றியமைத்து விட்டது.

பென்டிங் அவர்கட்குப் பின்னர் வந்த லார்டு ஆக்லண்டு, லார்டு ஹார்டிஞ்ச் ஆகியோர் ஆங்கிலக் கல்வியே இந்நாட்டில் வளர வேண்டும் எனக்கூறி அதற்கான செயல்களை வெற்றிகரமாகச் செய்து முடித்தனர். ஆக்லண்ட் காலத்தில் இந்தியர்களும் உயர்ந்த அரசாங்க உத்தியோகங்கள் வகிக்க அனுமதிக்கப்பட்டனர். இதனால் ஆங்கிலக் கல்வி பெரும் அளவில் பரவத் துவங்கியது. நீதிபரிபாலன மொழியாக இருந்துவந்த அரபு மொழியை ஒழித்துவிட்டு அதன் இடத்தில் ஆங்கில மொழியை அமர்த்திவிட்டார் கவர்னர் ஜெனரல். இதுவரை அரபு ஆங்கில மொழிகளை கற்று அவதிப் பட்டுவந்த இந்துக்கள் ஆங்கில மொழிமட்டுமே கற்றுவர நேர்ந்ததில் மகிழ்ச்சியடைந்தனர். முஸ்லிம்களோ தமது மதமொழி நிலைகுலைந்ததைக் கண்டு மனம் நொந்தனர். ஆங்கில மொழியைக் கற்பதில் அக்கறை கொள்ளவில்லை.

லார்ட் ஹார்டிஞ்ச் காலத்தில் 1844ல் ஆங்கிலம் தெரிந்தவர்கட்கே இனி அரசாங்க உத்தியோகங்கள் வழங்கப்படும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதற்காக ஆண்டு தோறும் ஆங்கில மொழியில் பரிட்சை நடைபெற்று வரவும் உத்தரவிடப்பட்டது. கீழ்த்தர உத்தியோகங்களுக்குக் கூட ஆங்கிலக் கல்வி முக்கிய யோக்கியதாம்சமாகக் கருதப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. இப்படியாக மெக்காலேயின் எண்ணம் வெற்றிவாகை சூடியது.

—தொடரும்

தமிழன் அந்தோ

புல்லிலும் மகிமை புகுத்திய
புல்லர்கள் வரவால் நாட்டில்
எல்லையும் தாண்டி விட்ட
எண்ணிலா இன்னல் பெற்றார்
கல்லிலும் கடவுள் உண்டாம்
கயவர்கள் சொன்னார் என்று
சொல்லையும் நம்பிக் கெட்டான்
சோர்விலா தமிழன் அந்தோ!

விதிதனை கொண்டு வந்த
வீணர்கள் வரவால் நாட்டில்
மதிதனை இழந்து நின்றான்
மாசறு தமிழன், இன்றும்
சதிதனை பேணி வளர்க்கும்
சழக்கரின் செயலால், தனது
கதிதனை இழந்து விட்டான்
கன்னிநல் தமிழன் அந்தோ!

நீதியே சிறிதும் இல்லாமனு
நீதியோர் வரவால் நாட்டில்
சாதியே பலவும் கொண்டான்
சதிதனை அறியாத் தமிழன்
வேதியர், நாட்டில் உயர்ந்த
சாதியார் என்று கொண்டு
ஓதியே நின்றான் தமிழன்
உண்மையை உணரா தந்தோ!

சோதிடம் கொண்டு வந்த
சூதகர் வரவால் நாட்டில்
மேதினி தன்னில் என்றும்
மேன்மையாய் வாழ்ந்த தமிழன்
ஆதியில் வாழ்ந்த வாழ்வில்
பாதியும் யின்றித் தானும்
நாதியே அற்றான் இன்று
நலமெலாம் இழந்து அந்தோ!

ஆகமம் கொண்டு வந்த
ஆரியர் வரவால் நாட்டில்
சோகமே அறியாத் தமிழன்
சோகம் உருவாய்ப் பெற்றான்.
யாகமே வளர்த்து வாழும்
எத்தரின் செயலால் இன்று
சாகவே வழியே யின்றி
சங்கடம் பெற்றான் அந்தோ!

புராணமே கொண்டு வந்த
புளுகரின் வரவால் நாட்டில்
வீரமே போற்றி வாழ்ந்தோர்
வீழ்ந்தனர் நிலையும் மாறி
சூரராம் தமிழர் என்ற
சொல்லையும் மாற்றி விட்ட
காரணம் அறிந்து கொண்டால்
கலங்கிடும் நெஞ்சம் அந்தோ!

—ச. ராமாநுசம், இரட்டணை.

பம்பாய் அந்தேரி தி. மு. க.

17—7—55 ஞாயிறு மாலை 4-30 மணிக்கு அந்தேரி தி. மு. கழக சார்பில் மும்முனைப் போராட்ட நினைவு நாள் தோழர் எ. ஈ. கே. யாகுப் அவர்கள் தலைமையில் அ. தி. மு. க. அலுவலகத்தில் நடைபெற்றது.

அது சமயம் கழக செயலாளர் தோழர் எல். எம். பாண்டியன் கூட்டத்தை ஆரம்பித்து வைத்து தோழர் எ. ஈ. கே. யாகுப் அவர்களை தலைமை தாங்கும் படி கேட்டுக் கொண்டார் தலைவர் முன்னுரைக்குப்பின் தோழர்கள் எஸ். கணேசன் எஸ். துரைராஜ எஸ். மூத்து பி. அல்லி ஆர். பி. நாதன் (செயலாளர் மாலாட்) டி. ஏ. அழகுமுத்து வி. சுப்பையா இரா. தஞ்சைத்துரை ஆகியோர் பேசிய பின்னர் ஏகமனதாக மூன்று தீர்மானங்கள் நிறைவேறின.

இந்திய அரசின் கல்வி இலகா மீண்டும் தென்னாட்டுப்பள்ளிகளில் இந்தியை கட்டாயப் பாடமாக்க வேண்டுமென்ற இந்தி வெறித்தனத்தை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதோடு உடனடியாக சென்னை அரசியலார், தலையிட்டு நிறுத்தும் படியும் இதற்கு தென்னாட்டு மக்கள் எதிர்ப்புக் காட்டும்படியும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்களின் படத்தை பள்ளிகளில் திறந்து வைக்காதே என்ற சென்னை அரசியலார் பிற்போக்குத் தன்மையை இக்கூட்டம் வன்மையாக கண்டிப்பதோடும் உடனே திரு. வி. க. அவர்களின் படத்தைதிறந்து வைக்க ஆணையிடும்படியும் அரசியலாரை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

மும்முனைப் போராட்டங்களில் உயிர் நீத்த உத்தமர்களுக்கு இக்கூட்டம் வீரவணக்கம் செலுத்துகிறது.

●

கூர்வாளிலிருந்து ரத்தஞ் சொட்டிக் கொண்டிருந்தது. அதைத் தாங்கிப் பிடித்திருந்த கரமோ நடு நடுங்கியது — ஆனலும்: ஆவேசம் பிடித்த குள்ளன் தாவித்தாவி ஓடிக் கொண்டேயிருந்தான்!...........

(மேலே—தொடருங்கள்)

41

தன் எதிரே ஆவேசத்தோடு கத்தியுங் கையுமாக ஓடிவந்து நின்ற குள்ளனைப் பார்த்ததும் போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு நடுக்க மேற்படாமல் போகவில்லை ஏதோ எழுதிக் கொண்டிருந்ததை நிறுத்திவிட்டு ஆச்சரியத்தோடு நாற்காலியிலே சாய்ந்தார். ஸ்டேஷனைக் காவல் காத்துக் கொண்டிருந்த இரு போலீஸ் ஜவான்கள் குள்ளனை நோக்கி வந்து அவன் கரத்திலிருந்த ரத்தஞ் சொட்டும் கத்தியைப் பிடுங்கினர்.

..."நான் கொலை செய்து விட்டேன்! என்னால் குத்திக் கொலை செய்யப்பட்டவன் மலைச்சாரல் புது வீட்டிலே புரண்டு கொண்டிருக்கிறான்...."

என்று வெறியனைப் போல கூறிய குள்ளனின்பேச்சைக்கேட்டதும் இன்ஸ்பெக்டர் குள்ளனைக் கைது செய்யும்படி ஜவான்களுக்கு உத்தரவிட்டு விட்டு...சிலஜவான்களின் துணையோடு மலைச்சாரலுக்கு விரைந்தார்.

குள்ளனால் வலது கரத்திலே குத்தப்பட்டு மயங்கிக்கிடந்த பாலத்துவாசி—மயக்கந் தெளிந்ததும் நகர்ந்து நகர்ந்து வெளியே—ஓட முயற்சித்துக் கொண்டிருந்தான்.

...அந்த நேரத்திலே தான் போலீஸ் படை அந்தப் புது வீட்டை முற்றுகையிட்டது. இன்ஸ்பெக்டர் கையிலேபாலத்து வாசி சிக்கினான்! மாடவீதியிலிருந்த ஹோமியோபதி டாக்டரிடம் பாலத்து வாசியை எடுத்துச் செல்லும் படி ஜவான்களிடம் கூறிவிட்டு...

'நீ கைது செய்யப்பட்டிருக்கிறாய்' என்று கம்பீரமாக நிமிர்ந்து கூறினார் இன்ஸ்பெக்டர்-பாலத்து வாசியிடம்.

அம்பு வீச்சைத்தாங்கிய புறு—வேடனிடமும் சிக்கியது!

ஹோமியோபதி டாக்டரால் முதல் உதவிதான் செய்யமுடிந்தது. கத்தி ஆழமாய்ப் பாய்ந்திருந்ததால் திறமை வாய்ந்த டாக்டரின் சிகிச்சை தேவைப்பட்டது பாலத்து வாசிக்கு. எனவே அவசர அவசரமாக தென்காசிக்கு எடுத்துச் செல்லப்பட்டான். அங்கே அவனது நிலை படுமோசமாகிக் கொண்டிருந்தது. மேல் மார்புக்கும்—புஜத்துக்கு மிடையேகத்தி பாய்ந்ததால் மூச்சு விடுவது மிகுந்த கஷ்டமாகியிருந்தது. பாலத்துவாசி எந்த நேரத்திலும் மரணத்தை எதிர்பார்த்தே காத்துக் கிடந்தான்.

இன்ஸ்பெக்டரோ அவனோடு

அன்பாகப் பேசி எவ்வளவோ சிரமத்துக்குப் பின் அவனிடமிருந்து மரண வாக்கு மூலம் வாங்கித் தீர்த்தார்.

பாலத்து வாசி லேசாக மூச்சு விட்டு நிறுத்தி நிறுத்திச் சொல்லிய 'வாக்கு மொழி'யை...விடாமல் தொடர்ந்து எழுதி முடித்திருந்த இன்ஸ்பெக்டர் ஒரு முறை கோர்வையாகப் படிக்கத் துவங்கினார்,

..."நான்தான்டே தவகாஸ் சிதம்பரம். கொலை வழக்கிலே சம்மந்தப் படுத்தப்பட்டுபோலீஸாரால் கடந்த மூன்று மாதங்களாகத் தேடப்பட்டு வருபவன். சிதம்பரநாதரின் கொலைக்குக் காரணமானவன் நானேதான். பட்டரின் வீட்டிலேயிருந்த ஆட்டக்காரிக்கும் எனக்கும்தொடர்பிருந்தது. இடையே சிதம்பரநாதர் புகுந்தார். ஒருநாள் நள்ளிரவு. நல்ல மழை நேரம்...பட்டரின் வீட்டிலே ஆட்டக்காரியோடுஊர் பெரியவர்-சிதம்பரநாதர் கொஞ்சிக் கிடந்தார். தாகத்தைத் தணித்துக் கொள்ளச் சென்ற எனக்கு ஆட்டக்காரியால்அவமானந்தான் கிடைத்தது, எனக்கும்-ஆட்டக்காரிக்கு மிடையே நடந்த காரசாரமான விவாதத்துக் கிடையே ...சிதம்பரநாதர் ஈடுபட்டார் வெறி கொண்டவனைப் போல நான் பாய்ந்து தாக்கினேன், தற்காப்புக்காக எந்த நேரமும் நான் இடையிலே வைத்திருந்த சிறு கத்தியால் அவரைத் தாக்கிவிட்டு ...சிதம்பரத்திலிருந்த என் அமுதத்தைக் கூடப் பார்க்காமல் ஓடோடி வந்து விட்டேன். போலீஸாரோ எங்கெங்கோ வலை வீசிக் கொண்டிருந்தனர்.

நானோ நாகரிக உடையோடு நீண்ட மீசை வைத்துக்கொண்டு மாறிய உருவத்தோடு குற்றாலத்திலே தங்கினேன். இங்கேயும் என் இதயவெறி அடங்கவேயில்லை. வனஜா என்ற அழகியின் மீது என் பார்வை பதிந்தது இதுவரை என் வலை வீச்சுக்குத் தப்பியவர்களே கிடையாது. எனவே... அந்தப் புள்ளிமான் என் வஞ்சக வலையிலே துள்ளி விழுந்து விடுமென்றுதான் சுலபமாக எண்ணினேன். முயற்சிகளைத் துவக்கினேன். அதற்கு முட்டுக்கட்டையாக சேகர் என்ற டாக்டரிருப்பதை அறிந்துகொண்டேன்.

இருவரும்-காதலித்தனர், அந்த அன்புக் காதல் நெஞ்சங்களிலே நஞ்சைத் தடவினால்தான் அழகு மொழி பேசும் புதுப்புறுவோடு நான் கொஞ்சிப்பேச முடியுமென்பதை உணர்ந்தேன்.

இதற்காக் ஒருநாச நாடகமே நடத்திவைத்தேன், இங்கு வருபவர்களுக்கு விரும்பியதைச்செய்து தரும் வேலையிலே ஈடுபட்டிருந்த குள்ளனொருவனை அந்த நாடகத்துக்குத் துணையாக்கிக் கொண்டேன். முதலில் மறுத்தான்... பண ஓசையை எழுப்பியதும் என் பாதத்திலே தஞ்சமடைந்தான்,

பழரசத்தோடு போதை மருந்தைக் கலக்கி ஒருகூஜாவிலே—குள்ளன் மூலமாக அனுப்பிவைத்தேன். குள்ளனும், 'இதுசேகர் தந்தனுப்பியது' என்று கூறி வனஜாவிடம் தந்தான். வனஜா பருகியதும் மயக்க நிலையடைந்து கொண்டிருந்தாள். சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டு குதிரை வண்டியிலே வனஜாவை மலைச்சாரலுக்கு அழைத்து வந்தான். நானும் சேகரை...வனஜாவின் காமவெறியாட்டத்தைக் காட்டுகிறேனெனக் கூறி அழைத்து வந்து மலைச்சாரலின் ஓரத்திலே நிறுத்தினேன். பழரசமும்-போதையும் வனஜாவின் நெஞ்சைக் கூத்தாடவைத்தது, தன் எதிரே யிருந்தது குள்ளனென்றாலும் அவனைத் தாவிப்பிடித்து காமக் கதை பேசினாள்...அவளை அப்படிப் பேசவைத்தது பழரசம் தந்த புதுப் போதை!

காட்சியைப் பார்த்த சேகர் நெருப்பானான். இதயத்திலே அழகுச் சிலையாகி ஆடிக்கொண்டிருந்த வனஜாவை உடைத்தெறிந்தான், அதைத்தானே நானும் விரும்பியிருந்தேன். வனஜாவை சாரல் ஓரத்துப் புது வீட்டுக்குக் குள்ளன் அழைத்துச் சென்றான். அங்கே அவளின் மயக்கந் தெளிந்தது. அவளைக் கெடுக்கும் நோக்கத்தோடு அந்த அறையிலே கால் வைத்தேன். அவளோ நீதிவிளக்கம் பேசினாள். அந்த அன்பு போதனை என் இரும்பு நெஞ்சுக்குக் கேட்கவேயில்லை......ஆனால் குள்ளனுக்கோ அந்த நல்லுரைகள் அறிவுக் கண்ணைத் திறந்து விட்டன. என் ஆதிக்கத்திலிருந்து வனஜாவை விடுவித்து விடும்படிக் கூறினான். நான் ஆத்திரங் கொண்டு குள்ளன் மீது பாய்ந்து தாக்கினேன். நாங்கள் போராடிய போது என் கையிலிருந்த சிறு கத்தி அவனிடம் கிடைத்து விட்டது. கோபாவேசத்தோடு தான் தப்பித்துக் கொள்ளும் முறையிலே குள்ளன் என்னைக் குத்தி விட்டான். குள்ளன் தனது தற்காப்புக்காகத்தான் என்னைக் குத்தினான். அவன் குற்றவாளியுமல்ல தண்டனை பெறத்தக்கவனுமல்ல கொலையும், கொடுமையும் புரிந்த நான்தான் குற்றவாளி. தண்டனை தரப்பட வேண்டியது எனக்குத்தான். ஆனால்...நீங்கள் தரும் தண்டனையை ஏற்றுக் கொள்ளுவதற்கு முன்னதாகவே காலந்தருந் தண்டனையை —நல்ல தீர்ப்பை—ஏற்றுக் கொள்ளும் நிலையிலேயிருக்கிறேன். சத்தியம் —வெற்றிச் சங்க நாதம் முழங்குகிறது! சாகசம்-சமாதியிலே தூங்கப் போகிறது!'

......இன்ஸ்பெக்டர் அந்த உள்ளத்தை அறுக்கும் தேவதாஸின் ...ஆமாம்; பாலத்துவாசியின்... வாக்கு மொழியைப் படித்து முடித்ததும்... குற்றாலத்திலிருந்த சேகரையும்—வனஜாவையும் காண அவசரமாகப் புறப்பட்டார்!

(அடுத்த வாரம்-விரிவான முடிவுரையோடு முடியும்.)

●

திரு. வி. க. மன்றம்

சென்னை ஆயிரம் விளக்கு நகராண்மை ஆண் பள்ளி அருகாமையில் திரு. வி. க. மன்றம் திறப்பு விழா 27-7-55 அன்று மாலை 6மணிக்கு வழக்கறிஞர் சௌவிஜய தலைமையில் நடைபெற்றது மன்றத்தை அருள் தங்கையா ரெவரன்ட் திறந்து வைத்து திரு. வி. க. அவர்களின் தமிழ்த் தொண்டு பற்றி விளக்கினர். பின்னர் தோழியர் லக்ஷிமி முத்தையா டி. என். ராவணன். நடிகமணி டி. வி. நாராயணசாமி டி. எம். சண்முகம் மாணவர் கண்ணதாசன், கவிஞர் கண்ணதாசன் பேசினர்

ஆயிரம் விளக்கு நகராண்மைக் கழக ஆண் பள்ளி அருகாமையில் உள்ள பூங்காவை (Park) திரு. வி. க. பூங்கா என பெயர் வைக்குமாறு சென்னை நகராண்மை கழகத்தையும், சென்னை அரசாங்கத்தையும் இம் மன்றம் கேட்டுக் கொள்கிறது என்ற தீர்மானமும் இக் கூட்டத்தில் நிறைவேயது.

அங்க மைதானம்

21—7—55 மாலை 6 மணிக்கு அங்க மைதானத்தில் திராவிட முன்னேற்றக் கழக துவக்க விழா தோழர் பி. சுப்பையன் தலைமையில் நடந்தேறியது. காஞ்சில் கி. மனோகரன் கோவை தண்டபாணி என். கிருஷ்ணன் பல்லடம் பொன்னுசாமி. சண்முகநாதன் பேசினர். எம். வீரப்பன் கொடியேற்றி வைத்தார். கீழ்க்கண்ட செயற் குழுவும் அமைக்கப்பட்டது. செயலாளர் அருணாச்சலம் துணைச்செயலாளர் பாலு பொருளாளர்: பி. வீரப்பன், மாவட்ட உருப்பினர்: பி. சுப்பையன்.

திருவள்ளுவர் விழா

குடியேற்றம் சந்தைப் பேட்டை மக்கள் மறுமலர்ச்சி மன்றத்தின் நிர்வாக உறுப்பினர் கூட்டம் தோழர் மணி இல்லத்தில் 27—7—'55 மாலை 6-மணிளவில் மன்ற செயலாளர் இராசவேலன் தலைமையில் நடைபெற்றது. அவ்மயம் புரசை குறள் நெறிக் கழகத்தின் அறிக்கைக் கிணங்க 'மன்றத்'தாரால் வள்ளுவர் விழா கொண்டாடப் பட்டது. கூட்டத்தில் திருக்குறளின் தனித்தன்மை பற்றியும் வள்ளுவரின் மாண்பு பற்றியும் தோழர்கள் கு. மதிவதனன், க. நெடுமாறன் ஆகியோர் பேசினர். கூட்டம் சுமார் 8—மணிக்கு முடிவுற்றது.

கைத்தறி ஆடையையே அணியுங்கள்

கருவிழி... உதிர்ந்த தொடர்ச்சி

பவில்லை சகோதரி! எழுந்திருங்கள்! இப்பரந்த உலகத்திலே எத்தகைய வைரியின் தாக்குதலையும் சமாளிக்கும் வலிமைபடைத்த எனக்கு, ஒரு பெண்மணியின் கண்ணீரை மட்டும், தாங்கிக்கொள்ளும் துணிவும் — வலிவும் இல்லாமற்போனது விந்தையிலும் விந்தைதான்! எழுந்திருங்கள் சகோதரி! உங்களின் அன்புப் பேச்சு, சுற்றி வளைத்து என் இருதயத்தையே வெகுவாகக் கவர்ந்து விட்டது. வாருங்கள் உள்ளே போகலாம், உமது கணவருக்கு...!

ஒரு தீங்கும் நேராதல்லவா?...

உங்கள் 'கணவர் அன்பே' அன்பு! உலகின் ஒவ்வொரு அரசியற் குற்றவாளிக்கும், தங்களைப் போன்ற நல்ல உள்ளம் படைத்த மனைவிமார்கள் அதிர்ஷ்டவசமாக இருந்துவிட்டால், உலக வல்லரசுகளின் கதி வேடிக்கையாகத்தானிருக்கும்...! வாருங்கள்! உள்ளே போகலாம்!!

காட்சி 2

உட்காருங்கள்...!

பரவாயில்லை அண்ணா...!

பயப்படாதீர்கள்...!

[மௌனம்]

இதோ! இந்தக் கடிதத்திலிருப்பது யாருடைய கையெழுத்து...?

என் கணவருடையது!

நிச்சயமாகச் சொல்லுவீரா?

ஆமாம்! நிச்சயமாக இது என் கணவர் எழுதிய கடிதம்தான்!

விஷயத்தைப் படித்தீர்களா?

[மௌனம்]

இதுதான் உமது கணவரைக் குற்றவாளியாக்கிய கடிதம்! பகையரசனுக்குத் தகவலனுப்பும் போது எமது வேவுக்காரர்களால் கண்டெடுக்கப் பட்டது! இதோ! இன்று உம்எதிரிலிருக்கிறது. கையிலிருக்கிறது. சற்றுமுன் தாங்கள் சிந்திய கண்ணீரை இதன் பக்கங்களிலே நீங்கள் சிந்தியிருந்தாலும் இந்த எழுத்தும் பொருளும்: சேதியும் உளவும் நிச்சயமாக மாறாது. அழியவும் அழியாது...! அவ்வளவு வலிமை கொண்டவைகளிவைகள்! வெற்றித் தோல்வியை நிர்ணயிக்கும் பலமான பிரச்னையைப் பற்றிய விளக்கம் எதிர் பாசறைக்குப் போய்க்கொண்டிருக்கிறது இதன் மூலம்...! உமது கணவர் அனுப்புகிறார்...சரணடைந்த பிறகும்! எமக்கு உதவுவதாக வாக்களித்த பிறகும்! இங்கோ நீர் வாதாடுகிறீர். கண்ணீர் சொறிகிறீர்! நான் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு...என் இதயத்தைத் தொடும் அளவுக்கு.

[மௌனம்]

'அழாதீர்கள்! மீண்டும் அது ...! அந்தக் கடிதத்தை இதோ இந்த ஜுவாலையிட்டு நீங்களே பொசுக்கி விடுங்கள்...! அதொன்றுதான் உமது கணவரைக் கொல்லும் மனச்சாட்சி! நாமவரைத் தண்டிக்கப் போதுமான அத்தாட்சியும் அதுதான்! அது எரிந்து பட்டால் உமது கணவருக்கெதிரான வேறு சாட்சியங்களே கிடையாது....! அப்போது அவர் குற்றவாளியாக மாட்டார்! எனவேதான் கூறுகிறேன் அதை எரித்து விடுங்கள்...! உமது கணவருக்கு அவரே எழுதிக்கொண்ட அந்த மரண சாஸனத்தை நீங்களே கொளுத்தி விடுங்கள்! தயங்காதீர்கள்......! மனப்பூர்வமாகவே சொல்லுகிறேன்........ அதை நெருப்பிலே போடுங்கள்!

[பயம் கலந்த மௌனம்]

'ஏன் பயப்படுகிறீர்கள்! அழாதீர்கள்! மீண்டும் கண்களைக்குளமாக்கிக் கொள்ளாதீர்கள்...!! அந்தக் கடிதத்தை இப்படிக் கொடுங்கள்! உமக்கு அந்தச் சிரமமும் வேண்டாம்!! நானே போடுகிறேன்......அது பொசுங்கிப் போவதை அப்போதாகிலும் நீங்கள் பயமின்றிப் பார்த்து மகிழுங்கள்! இதோ....!போதுமா?......!

'அரசே! அன்பு அண்ணா!!

'பேசுங்கள் இளவரசியாரே... பேசுங்கள்!' கடிதம் எரிந்து விட்டது; உமது கணவரும் குற்றவாளிக் கூண்டுக்கு வெளியே நின்றார்.......! அவர் பிழைத்தார்!! இப்போதாகிலும் பேசுங்கள்!

'அரசே...!'

'பேசுங்கள் இளவரசியாரே...'

'நாவே எழவில்லையரசே...... உமது மாண்பை வாழ்த்த! அவ்வளவு மகிழ்ச்சியரசே.......இந்த அபலைக்கு குணக்குன்றும் உங்களின் கண்ணியமும், அன்புள்ளமும், உலகில் என்றென்றும் நின்று நிலவட்டுமரசே...! புவியாளப் பிறந்த நீர் புகழையும் ஆளுவீராக! உமது கண்ணியத்தை நமது பகைவரும் வாழ்த்தட்டுமரசே!

எமது கண்ணியத்தை அல்ல இளவரசியாரே...உமது நீலக் கருவிழிகளை......! அவைகள் உதிர்த்த கண்ணீரை......! அதைத்தான் நாடு பாராட்டும்...! பாராட்டவேண்டும் அந்தச்சோக சிறு மணிகளும், அவைகளினின்றும் கிளம்பிய சிறிய நீரருவியுந்தானே......உமது கணவருக்கு, உயிரையும் — நான் கருணையோடும் அன்புள்ளத்தோடும் நடந்து கொள்ள எனக்கு மேலுமொரு வாய்ப்பையும் தேடித்தந்தது! எனவே....அந்த அன்பு ஊற்றுப் பெருக் கெடுக்கும் சிறுமணிகள் நன்றாக ஒளிவிட்டுப் பொலிவு பெறட்டும்! அதனால் பெண்ணுலகம் புனிதமடையட்டும்! பெருமை பெறட்டும்! சென்று வாருங்கள்! உமது கணவரையும் உடனழைத்துப் போங்கள்! அதோ அவர்...!'

'வருகின்றேனரசே...... இல்லை இல்லை.........எமதன்புக் களஞ்சியமே அருமை அண்ணா! சென்று வருகின்றோம். சோகம் தோய்ந்த இந்த அபலை நெஞ்சத்திற்கு ஜீவ ஒளி தந்த பெருந்திறலே, நீர் வாழ்க! நும் கொற்றம் வாழ்க! வளர்க நும்புகழ்! வாழிய நும் நாடு!

*

இப்படியொரு சம்பவம் நெப்போலியன் வாழ்வில் நீலக்கருவிழியைக் காட்டி அதிலே கொப்பளிக்கும் கண்ணீரை ஊற்றெடுக்கச் செய்து; தூக்கு மேடையிலே நின்ற தன் கணவன் உயிரைக் காத்திடக் கிளம்பி வந்தாள் அந்தக் காரிகை. அந்த முயற்சியிலே வெற்றியும் பெற்றாள்! எவ்வளவோ பெரும் படைகளை யெல்லாம் போரிட்டு வீழ்த்திய, நெப்போலியனுக்கு ஒரு பெண்மணியின் கண்ணீரை வெல்வது முடியாத காரியமாகி விட்டது. தன் பலவீனத்தைத் தானேவும் ஒப்புக் கொள்ளுகிறான்.

('I never' said he, 'Could resist a woman's tears'')

என்று வெளிப்படையாகவே சொல்லுகிறான். அதோடு தன் கணவன் உயிரைக்காப்பாற்ற வேண்டுமென்று ஒரே குறிக்கோளால் உள்ளம் துடிக்க ஓடோடியும் வந்த அந்தப் பெண் மயிலாளின் கவலை நீக்கி அபயமும் அளிக்கிறான்! இறுதியாக அவளை அவளின் உயர்ந்த லட்சிய முயற்சிக்காக பாராட்டவும் செய்கிறான் நெப்போலியன். தனது அருமைக் காதலி ஜோசப்பைனுக்கு எழுதிய காதற்கடிதத்தில் திருமதி ஹேட்ஸ்பெல்டை வெகுவாகப் புகழுகிறான் நெப்போலியன் இத்தகைய புனித உள்ளம் கொண்ட பெண்மணிகளையே, தான் மிகவும் விரும்புவதாகச் சொல்லுகிறான். காரணம் —அத்தகைய பெண்மையும் மென்மையும் அடக்கமும் உடைய பெண்மணிகளே தன் அருமைக் காதலியான ஜோஸப்பைனை ஒத்திருக்கிறார்களென்று அவளுக்கே எழுதுகிறான். உலகிலே மிக மிகச் சிறந்த காதற் கடிதங்களை அவைகளை இலக்கியமாக்கிய மாவீரன் நெப்போலியனின் அந்தக் கடிதத்தில் கண்ட, அந்தக் கடைசி 4 வரிகளை நாமப்படியே இதோ தருகிறோம்.

"..............I like women who are faminine, unaffected and amiable, for they alone resemble you! Adieu, my love· I am very well.

Napolean

6—11—1806. 9 P. M.

'பெண்மையும், மாறுபடாத சரளத்தன்மையும், தன்னடக்கமும் உடைய பெண்மணிகளையே நான் பெரிதும் விரும்புகிறேன்! காரணம்; அத்தகையவர்கள்தான் உன்னை ஒத்திருக்கிறார்கள்! அன்பே! என் அருமைக் காதலியே! நானிங்கே மிக்க நலந்தான்!"

நெப்போலியன்

6—11—1806, இரவு 9 மணி என்று மிக அழகாக எழுது அந்தப் பெண்மணியை பெண்குலத் திற்கோர் எடுத்துக்காட்டாக புகழுகின்றான் நெப்போலியன்! கடிதத்தின் முதற்பகுதி 'ஹேட்ஸ்பெல்'டைப் பற்றிய புகழுரைகளைத்தான் தாங்கி நிற்கிறது!

எனவே அந்த நீலக்கருவிழியாள் அன்றங்கு உதிர்த்தகண்ணீர் நெப்போலியனின் உள்ளத்தை மட்டுமல்ல; இன்றும் நமதுள்ளத்தையும் நனைக்கத்தான் செய்கிறது, ஓர் உயிரையே மீட்டுத்தருகின்ற அளவுக்கு சக்தியும் உணர்ச்சி வேகமும் கண்ணீருக் குண்டென்பதை தான் பெற்ற மகத்தான வெற்றியின் மூலம் நிரூபித்துக் காட்டிவிட்டாள் அந்த புனித உள்ளத்தாள்!

நெப்போலியனின் கண்ணியத் திறமும், பிரான்சின் புகழுக்கும் பெருமை தேடும் வரலாறாக அமைகிறது இச்சம்பவம் அங்கு —அவர்களுக்கு. ஆனால் இங்கோ நமக்கும் இருக்கத்தான் செய்கின்றன. அத்தகைய சம்பவங்கள் தேவ மாகாதைகள்......வரலாறு ரூபத்தில்!

சாவித்திரியின் கண்ணீரும்— சத்தியவானின் அற்ப ஆயுளும் —எமனின் கம்பீரமும் — பாசக்கயிற்றின் மகிமையும் — அது சத்தியவானின் உயிர் குடித்த பெருமையும்—மகேஸ்வரனின் வருகையும் அவரளித்த அபயமும்—பக்தியின் கீர்த்தியும், பக்தர்களின் பிரதாபங்களும்—அடங்கிய ஏடுகளே நமக்கு வரலாறுகளாக அமைந்து கிடக்கின்றன இங்கே!

பொருந்துமா......? என்கிறீர்களா! பொருந்தாததுதான். ஆனால் அதைக் கூறிடும்போது தானே பொங்கியெழுகிறார்கள்!

வரலாறு—வரலாறு என்று மேதைகளைப் போலப் பேசிடும் பேதைக் குணத்தோரே! பாரீர் நமது வரலாற்றை! பருகுவீர் அதன் இன்சுவையை! பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட, தெய்வீகப் பிரதாபங்கள் நனி நனி மிளிர மிளிர நம் புனித ஏடுகளில் தோய்ந்தாலும் அம்மையப்பனின் 'அபயமளிப்புப் படலங்களை' நீர் என்ன வென்றுதான் எண்ணிக் கொண்டீர்! சாமான்யமா அவைகள்? ஐயனின் திருவிளையாடல் களெல்லாம் வரலாறுகளல்லவா அறிவிலிகளே! என்று அவர்கள் நம்மைப் பார்த்து அதட்டிக் கூறும் போது நமக்கு வரலாற்று ஆசையேகூட மறந்துவிடும் போலிருக்கிறது.

என்ன செய்யலாம்! புண்ணிய நாடல்லவா! அந்தப் புனித (!) ஏடுகளைச் செல்லரிக்க — செல்லரிக்கவிட — கொஞ்சநாளாகிலும் பிடிக்கத்தானே செய்யும்? அதுவரையில் நாமும் பொருத்துக் கொள்ளத்தானே வேண்டும்!

கால் ஆணிக்கு மேல் பூசும் மருந்து

குதிக்காலிலும், பாதத்திலும், பள்ளம் பள்ளமாயும், சதை வளர்ந்து ஆணியைப்போல் ஏற்பட்டு நடக்கும்போது பாதமானது தரையில் வைக்கமுடியாமலும் கல் பட்டால் துடிதுடிப்பதுமாய் ஏற்படக்கூடிய வியாதியை ஆச்சரியகரமாய் கண்டிக்கக் கூடிய மருந்து இதுவே.

1 அவுன்ஸ் புட்டி 1-க்கு விலை ரூ 2-8-0 தபால் சார்ஜ் இனும்

ஸ்ரீ முத்து மெடிகல் ஹால்

வியாசர்பாடி சென்னை-12

சமயப்பணி சாத்தியமா?

வி. எஸ். முருகன்

தேவை! ஆயிரமாயிரம் அன்பர்கள் தேவை! சமூகத்துவேஷம் கிடையாது சாதித்துவேஷமும் கிடையாது! எனவே திரண்டு வாரீர், உழைப்பினை தாரீர்!

பத்து லட்சம் தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள் இந்த நாட்டில்! ஆனால் அவர்களது வாழ்வைப் பார்க்கும்போது, ஐயோ, என் தமிழர்கள் படும் வேதனையை தாங்க முடியவில்லையே! என் அருமை சகோதரர்கள் படும் துயர் காணமுடியவில்லையே? என்ன செய்யப் போகிறீர்கள் அன்பர்களே, என்ன செய்யப்போகிறீர்கள்! உங்கள் இனத்தினர் நிலை எவ்வளவு கீழ்நோக்கி போய் விட்டது கண்டீரோ! கண்டும் காரணம் தெரியாமல் நின்றீரோ! இதோ அதற்கோர் வழி! இதன்வழி செல்வீர் பணிதனை தருவீர், பயன்தனை பெறுவீர், என கூவிக் கூவி அழைக்கிறார் நண்பர் ஒருவர்.

நாடே கெட்டு விட்டது! கேடு தரும் நிலையை நாட்டில் இன்னும் நடமாட விடவேண்டாம், எனக் கூறுவதில் தவறொன்றும் இல்லை. நாட்டுமக்கள் வாழ்வு சீர்பட சிறந்ததொரு திட்டம் தந்தால், நல்லவர் மனம் பெருமைப்படும் அதனை விட்டு, படு மோசமான மற்றொரு பாதையைக் காட்டினால் ஏற்றுக் கொள்வரோ மக்கள்!

மலை நாட்டில் சமயத் தொண்டு செய்ய தொண்டர்கள் தேவையாம் அதற்காக காரணம் தருகிறார் நண்பர் கீழ் கண்டவாறு :—

"நீர் என்ன சமயம் என்று கேட்டால் அதற்கு சரியான விடை சொல்லத் தெரியாத மக்கள் லட்சக்கணக்கில் இருக்கிறார்கள் என்ன தெய்வத்தை வணங்குகிறீர்கள் என்று கேட்டால் உங்களுக்குத் தெரியாதுங்களா, நம்ம முனியாண்டியைத்தான் அல்லது கருப்பண்ணனைத்தான் என்று பதில் தருவார்கள். எங்கள் சகோதரர்கள் சமயத்தைப் பற்றிய அறிவில் இவ்வளவு தாழ்ந்த நிலையில் இருக்கும்போது வேதாந்த சித்தாந்த சண்டைகளைப் பிடித்தும், படித்தவர்களுக்கே மேலும் மேலும் சமயப் பிரசங்கங்களை செய்தும் என்ன பிரயோசனம்! நகரங்களில் இன்று சமயப் பிரசாரங்கள் நடைபெறுகின்றன. ஏதோ பொழுது போக்கிற்காக அவர்களும் வந்திருந்து கேட்டு விட்டு போகிறார்கள். இதனால் சமயம் வளர்ந்து விடாது, இன்று தோட்டப் பகுதியிலே வசிக்கும் 10 லட்சம் தமிழர்களுக்கும் வீடு வீடாகச் சென்று சமயப் பிரச்சாரம் செய்தால் மாத்திரமே அவர்களை மனிதர்களாக வாழச் செய்ய முடியும்" இவ்விதமான காரணங்களைக் காட்டுகிறார்.

கதிரவன் உதிக்கும் முன்பே எழுந்து செல்கிறார்கள் மக்கள் வியர்வையை சிந்துகின்றார்கள்! மழை என்று கூட பாராமல் பாடுபடுகிறார்கள். இருப்பினும் என்ன பயன்! சம்பளம் அதிகம் கிடைத்துதான் என்ன பயன்! குடியில் தொலைத்து விடுகிறார்களே என அங்கலாய்க்கிறார் நண்பர்!

உண்மையிலே தோட்டத் தொழிலாளர்களின் வருமானத்தை குடியும் சூதும், கூடவேயிருந்து தொலைத்து விடுகின்றன என்பது நன்கு தெரியும்!

அவர்களை அந்தப் பாதையை விட்டு திருப்பி அழைத்து வர அவசியம் திட்டம் தேவை! ஆனால் அத்திட்டம் அவர்களை திருத்துவதாயிருக்க வேண்டுமே!

குடி அவர்களை கெடுக்கிறது என்று கூறி சமயப் பிரச்சாரம் செய்யவும் இவர்கள் திட்டம் என்ன!

குடி வகையினால் நாட்டு மக்கள் கெட்டு விடுகிறார்கள் என்று கூறுவது சரியல்ல என்று நாம் கூற வில்லை கூறவும் விரும்பவும் மாட்டோம், ஆனால் அதனை ஒழித்து வைக்க வேறொரு வெறிப் பாதைக்கு அழைக்கும் அபோதித்தனம் வேண்டாம் எனத் தான்நான் கூற விரும்புகிறேன்.

நண்பர் கூறுகிறார். "வீட்டில் இறைவன் திருவுருவங்களில் ஏதாவதொன்றை வைத்து காலை மாலை விளக்கேற்றி விபூதி பூசி இறைவனை நினைத்து மற்றைய வேலைகளைத்தொடங்க வேண்டும் என்பது பற்றி அவர்களுக்கு உபதேசிப்பதோடு செய்தும் காட்டல் வேண்டும்"

வீட்டில் இறைவன் திருவுருவங்களில் ஏதாவதொன்றை என்று கூறுமிடத்து இந்த நாட்டில் அறியாமையின் விளைவால் ஆயிரக்கணக்கான அனக்காவடி, ஊர் பெயர் தெரியாத தெய்வங்கள், உலவுகின்றன என்பதை ஒத்துக்கொள்கிறார். தோட்டத் தொழிலாளர்களிடையே மீண்டும் அறியாமையை உண்டு பண்ண அழைக்கும் இந்த அன்பர் முதலில் மக்கள் மக்களாக வாழ, அவர்கள் தங்களது சரீர உழைப்பின் உண்மையை உணர்ந்து, உழைப்பின் பெருமையை உணரச் செய்ய முன் வர வேண்டுமே யொழிய, சமயப்பணி செய்வதால் பயனளிக்கும் என்று நம்புவது பரிதாபப்படக் கூடிய செய்கையாகும்.

இந்த நாட்டில் நடைபெறும் விழாக்களில் வேல் விழா என்று ஒரு விசித்திர விழா நடைபெறுகிறது இந்த விழாவினால் இந்த நாட்டு மக்கள் எந்த அளவில் முன்னேறியிருக்கிறார்கள் என்று கூறமுடியுமா! ஆண்டவன் பெயர் சொல்லி வாழும் சில எத்தர்களின் வாழ்வுக்கு வழிவகுத்ததே தவிர வேறு என்ன சாதித்து விட்டது! மலை நாட்டிலே சமயப் பணி புரிய அழைக்கும் அன்பருக்கும் இதனை அர்ப்பணிக்கிறேன். நாட்டில் அரசியல் பெயரால் உரிமை இழந்து ஓடு உன் நாட்டிற்கு என, இந்த நாட்டில் பிறந்தவனையே வெளியேற்ற சட்டம் தீட்டிக்கொண்டு இருக்கும் இன்றைய அரசாங்க அநீதியான சட்டங்களுக்கிடையே நெற்றியில்விபூதி பூசி காட்சி தந்தால் கவலை எல்லாம் தொலையுமா! கஷ்டம் தான் தீருமா!

நாட்டுப்புறத்தில் சமயப் பிரச்சாரங்களுக்கு ஏதோ பொழுது போக்கிற்காக மக்கள் வருகிறார்கள் என்று புலம்புகிறார் மக்களுக்கு இன்று உண்மை தெரிந்து விட்டது! எனவே இந்த மாதிரியான ஏமாற்று வேலைகளுக்கு மீண்டும் செவிசாய்க்க மாட்டார்கள்.

அரசியல் நிகழ்ச்சி யென்றால் கூடும் கூட்டம் ஆடி அமாவாசை தினத்தில் கூட்டமில்லையே என அலறுவது விவேகமாகாது! அந்த அளவுக்கு விழிப்பு ஏற்பட்டு விட்டது மக்களிடையே! எனவே இந்த மாதிரியான வேளையில் அமெரிக்கர்கள் காட்டும் அணுக்குண்டுகளைவிட, ஆபத்தான உங்கள் போக்கு கண்டு வருந்துகிறோம்

"தோட்டத்தின் ஒவ்வொரு பகுதிகளிலும் அருள்நெறிச் சங்கங்கள் ஏற்படுத்தி அச்சங்கங்கள் மூல இத்தொண்டு நடைபெற்று வர ஏற்பாடு செய்ய விரும்பினால், எஸ்டேட்களில் என்ன நிலையாகும்!

அதிகாலையில் எழுந்ததும் அரோகரா என்ற கோஷத்துடன் மக்கள் வந்தால் விரைவில் அரோகராவாக எல்லாம் மாறிவிடக் கூடாது.

எனவே தோட்டப் பகுதிகளில் சமயப்பணி என்ற பெயரில் மதவெறியைப் பரப்ப, முயற்சிக்கும் இந்த போக்கு மிகமிக தீமையானது! ஊர்க்குருவிகளும் வானம்பாடிகளும் பெரியதலைப்பில் செய்திகள் தந்தாலும், சமயப்பணியால், மக்களிடையே மலிந்துள்ள அறியாமை நீங்குமா? என்று கேள்வியினை தந்து யோசிக்க வேண்டுகிறோம்!

ஆண்டாண்டு காலமாக நடைபெற்று வரும் சமயப்பணி, மக்களை விழிப்படையச் செய்ததா—இல்லையே? எனவே சமயப்பணியில் அடிப்படையே கோளாறு தானே! அதனை அருள்நெறி கழகத்தார் சிந்தித்து தெளிவுபெறுவார்களாக!

●

கன்னடமும் கேட்கிறது?

வட நாட்டு ஆதிக்கத்தின் ஓர வஞ்சனையை மைசூர் தொழில் அமைச்சர் சந்தி சிரிக்க வைக்கிறார்

"தொழில் வளர்ச்சித் திட்டங்களில் தென்னிந்தியா, இந்தியப் பேரரசால் ஒதுக்கித் தள்ளப்பட்டுக் கிடக்கிறது"

"அரசியல் விடுதலை கிடைக்கப் பெற்ற நாளிலிருந்து, தென்னிந்தியாவில், ஒரு கல் தொலைவிற்குக் கூட புது புகைவண்டிப் பாதை போடப்படவில்லை.

"இந்தியப் பேரரசின் நேரடித் தொடர்பில் இந்து மைசூர் மாநிலம் துவங்கி நடத்தப்பட்டுவரும் தொழில் நிறுவனங்களில், பணி புரிய தொழிலாளர்களைத் தேர்ந்தெடுப்பதில், அந்த நிறுவனங்களின் நிர்வாகிகள். மாகாண வெறியைக்கையாளுகின்றனர்.

"இந்தத் தொழில்கள் இங்கு துவங்கப்பட்டதின் விளைவாக (மைசூர்) இம் மாநிலம் நலம் பெறுவதற்குப் பதிலாக, குடியிருப்பு ஏற்பாடு, குடிநீர்வசதி சுகாதாரம் போன்றவைகளைக் கவனித்துக் கொள்ள வேண்டிய புதிய தொல்லையே ஏற்பட்டிருக்கிறது.

"உண்மையில் கூறவேண்டுமானால், இத்தொழில் நிறுவனங்கள் மைசூர் மாநிலத்தில் துவங்கப்பட்டவை அல்ல என்றே நாம் கருதும் நிலையைப் பெற்று விட்டிருக்கிறோம்.

"இத்தொழில்களை இங்கு துவங்குவதற்கான மூலதன உதவியையும். மற்ற வசதிகளையும் மைசூர் அரசாங்கம் செய்திருந்துங்கூட, அவைகளின் நிர்வாக உரிமையில் நமக்குத் துளியும் பங்கு கிடையாது.

"இந்துஸ்தான் ஆகாய விமானத் தொழிற்சாலையிலும் இந்தியன் டெலிபோன் தொழில் நிலையிலும், மைசூர் அரசாங்க சார்பில் இடப்பட்டுள்ள ரூ. 90 லட்சம் மூலதனத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ள நாங்கள் யோசித்து வருகிறோம்

—இக்கருத்தை, காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில், தொழில் துறை அமைச்சர் எம். எம். சென்ன பாசப்பா, மனம் குழம்பி கூறியிருக்கிறார்.

"நாட்டின் இப்(தென்னிந்தியா) பகுதியின் தொழில், வர்த்தகம், போக்குவரத்து ஆகியவற்றின் அபிவிருத்தியில் இந்தியப் பேரரசு கருத்தைச் செலுத்தவில்லை" என்பதற்காக, காங்கிரஸ் ஊழியர்கள், தங்கள் ஏமாற்றத்தை தெரிவித்தனர்.

"தென்னிந்தியாவை உகந்தமுறையில் அபிவிருத்தி செய்யுமாறு இந்தியப் பேரரசைக் கட்டாயப் படுத்துவதற்காக தென்னிந்திய மாநிலங்களைச் சேர்ந்த அமைச்சர்கள் அனைவரையும் கொண்ட ஒரு மாநாட்டைக் கூட்டும் ஏற்பாடு இருந்து வருகிறது."

—இக்கருத்தையும், அதே அமைச்சர் தான் அக்காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில் அறிவித்துள்ளார்.

மேலும் அவர் பேசும்பொழுது, சிமெண்ட், புகையற்ற வெடி மருந்து, பழம் பக்குவப்படுத்துதல், பிலிம் ஆகிய வகையில் தொழிற்சாலை நிறுவ மைசூர் அரசாங்கம் தீவிரமாக யோசித்துக் கொண்டு இருப்பதாகவும், பெல்லாரி, சித்தல் துர்க் மாவட்டங்களில் கெந்தகப் படிவம் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும், கெந்தகம் அதிகம் கிடைக்கக்கூடும் என அறிய வந்தால், மைசூர் அருகாமையில் பெலகோலாவில் மூடப்பட்டுக் கிடக்கும் சாய உற்பத்தி சாலையை மீண்டும் துவங்க எண்ணியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

செல்வாக்குப் படைத்த காங்கிரஸ் கட்சியினருக்குச் சார்பாக அரசாங்க அதிகாரிகள் இருந்து வருவதாகவும், அச்சத்திற்கு இடங்கொடாமல் அதிகாரிகள் தங்கள் கடமையைச்செய்ய முன்வர வேண்டும் என்றும் காங்கிரஸ் ஊழியர் குறிப்பிட்டனர்.

Tel : WIND. Phone : 55373

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதருஸ்-1
பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதருஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்,

N. B :—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ் : 8. கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஓட்டல், மதுரை
" 103-1/127. பழனி ரோடு, திண்டுக்கல்
" கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
" வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்





திராவிடன் 9-ம் ஆண்டு
முதல் இதழில்......

மா. தங்கவேலர்
தரும் கருத்து விருந்து.

பாலைவன ரோஜா!

புத்தம் புதிய தொடர் நாடகம்

- குப்பையிலே மாணிக்கம்! சேற்றிலே செந்தாமரை! பாலைவனத்தில் ஒரு அழகு ரோஜா!
- அந்தச் சிரிக்கும் சிவப்பு ரோஜா...திகட்டாத தேன்மொழியிலே நாடக ரசிகர்களின் நெஞ்சுக்குப் புதுக் கதைக் கூறப் போகிருள்.
- நீலவானத்து நிலவு இன்ப மழை பெய்ய...கோலமயில் தோகை விரித்தாட....அந்த அழகு ஆட்டத்தோடு சேர்ந்து ஆடும் ஆடலரசியைப் பார்க்கும்போது காண்போர் இதயம் களிப்பிலாடாமலா யிருக்கும்!
- காட்சிகள்...நிலவாகி; எழுத்து ஜாலங்கள் மயிலாகி...பாலைவன ரோஜா......நாடக ரசிகர்களின் நெஞ்சிலே நாட்டியமாடும் போது...நிச்சயம் நீங்கள் மகிழ்ச்சி மலையின் உச்சியில்தானிருப்பீர்கள்.

—— இந்த அழியாத கலைச் சித்திரம் ——

ஆகஸ்டு 19-ல் "திராவிடன்" இதழில் ஆரம்பமாகிறது!

*　　　　*



ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் என். வி. நடராசன், சோமு அச்சகம், 16, ரிலையன்ஸ் ரைஸ்மில் தெரு, சென்னை 1.